பக்கங்கள்:15 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 08 வெள்ளிக்கிழமை 21.01.2022 கதிர் 77

# நியாயமான தீர்வை பெற்றுத் தருவது பிரிட்டன் கடமை!

## அந்த நாட்டின் அமைச்சரிடம் சம்பந்தன் நேரில் தெரிவிப்பு



கொழும்பு, ஜனவரி 21

"இந்த இலங்கைத் தீவில் தமிழர்கள் தமது தாயகத்தில் தனித்துவ இறைமையுடைய இனமாக வாழ்ந்தார்கள். அந்தத் தமிழர் தேசத்தை சிங்கள தேசத்துடன் இணைத்தவர்கள் பிரிட்டிஷ் கொலனித்துவ ஆட்சியாளர்கள்தான். ஆகவே, அந்த இணைப்பால் ஏற்பட்ட தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய, நியாயமான தீர்வு ஒன்றைப் பெற்றுத்தருவது பிரிட்டனின் கடமையும் பொறுப்புமாகும்."

10

### இது ரகசியம் அல்ல!

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் பிரிவினருக்கு புதிய பணி ஒன்று ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

போதைப்பொருளைத் தடவி, மோந்து பிடிப்பது

பக்கம்02 »

## யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்று

(இ.கலையமுதன்)

யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 12 ஆவது தடவையாக இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வரை முற்றவெளியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சிக்கு யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து எல்.ஈ.சி.எஸ். நிகழ்வை ஏற்பாடு

10

## ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை பிணையில் விட இணக்கம்

கொழும்பு, ஜன.21

மனித உரிமைகள் ஆர்வலரும் சட்டத்தரணியுமான ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை பிணையில் விடுவிப்பதை ஆட்சேபிக்கப் போவதில்லை என்று சட்டமா அதிபர் தரப்பு நேற்று மேன்முறையீட்டுநீதிமன்றத்தில் உறுதியளித்தது.

ஹிஜாஸ்

10

## பிரிட்டனிலுள்ள புலம்பெயர் தமிழருடன் இணைந்து செயற்பட விரும்புகின்றோம்

### அந்நாட்டு அமைச்சரிடம் கோட்டாபய தெரிவிப்பு

இலங்கை எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதுடன், மக்கள் அனைவரும் ஒன்றாக வாழக் கூடிய சூழலை உருவாக்குவதே அரசின் நோக்கமாகும்.

10



## சாணக்கியனுக்கு கொரோனா உறுதி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

10

## பந்துல பாகிஸ்தான் பயணம்

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன பாகிஸ்தானுக்கு உத்தியோகபூர்வ

10

### அவசர அவசரமாக கட்டுவன் – மயிலிட்டி பாதை உருவாக்கம்

# மக்களின் காணிகள் ஊடாக அடாவடியாக வீதி அமைப்பு!



## உண்மையை மூடி மறைத்து அங்கஜன் சளாப்பல் பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் சீற்றம்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 21

தனியார் காணிகள் ஊடாக அத்துமீறி பாதையை ஏற்படுத்த முடியாது. உண்மையான வீதியூடாக அதனை செய்ய வேண்டும். மக்கள் காணியூடாக வீதி அமைத்துவிட்டு வீதியை திறந்து விட்டேன் என பொய்யான பரப்புரை செய்து மக்களை ஏமாற்றுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்

கட்டுவன் – மயிலிட்டி வீதிப்புனரமைப்பு தொடர்பாக நேற்றைய தினம் ஊடகங்கள் கேள்வி எழுப்பிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

10

## சர்ச்சைக்குரிய வீதி புனரமைப்புப் பகுதியில் தீவிர பாதுகாப்பு; கண்காணிப்பு அதிகரிப்பு

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு செல்லும் வீதியில் இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கும் 400 மீற்றர் நீளமான வீதி விடுவிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் , குறித்த பகுதியில் இராணுவத்தினரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு, கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

விமான நிலையத்திற்கு செல்லும் கட்டுவான் – மயிலிட்டி வீதியில் 400 மீற்றர் நீளமான வீதி இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் கடந்த 32 வருடங்களுக்கு மேலாக காணப்படுகிறது.

குறித்த 400 மீற்றர் நீளமான வீதியினை விடுவிக்க பல்வேறு கால கட்டங்களில்,

10

## ஏழு பேரை வாளால் வெட்டிய ஏழு பேர் குழு புதனிரவு கைது

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு,ஜெயந்திபுரத்தில் பெண் ஒருவரின் உறவினர் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் வாள்வெட்டு குழுவைச் சேர்ந்த 7 பேரை வாள்கள் கத்தியுடன் நேற்று முன்தினம் இரவு தாம் கைது செய்துள்ளனர் எனத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பிரதேசத்திலுள்ள பெண் ஒருவரை

10

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போல வெளிநாட்டுக் கரன்ஸிக் கடத்தலையும் தடுத்துப் பிடிக்குமாறு அவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டுக்குள் அதிக விலை கொடுத்து டொலர் உட்பட வெளிநாட்டு நாணயங்களை மாற்றுவோர் அவற்றை வங்கிக் கணக்குகள் ஊடாக வெளியே அனுப்ப முடியாத சூழலில், ஆள் வைத்து - அவர்கள் மூலம் - டொலராகவோ, பிற கரன்ஸிகளாகவோ அப்படியே கடத்த முயன்று வருகின்றனர். இப்படி பெரும் தொகையான பணத்தை தம்முடன் எடுத்துச் செல்வோரே இப்போது சிக்கி வருகின்றனர்.

இவ்வாறு டுபாய்க்கு 4 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட வெளிநாட்டு கரன்ஸிகளை எடுத்துச் செல்ல முற்பட்ட மூன்று பெண்கள் உட்பட ஐவர் நேற்று முன்தினம் மடக்கப்பட்டுள்ளனர்.

22 ஆயிரத்து 300 அமெரிக்க டொலர், 63 ஆயிரத்து 500 யூரோ, 8 ஆயிரத்து 725 ஸ்டேலிங் பவுண், 2 லட்சத்து 92 ஆயிரம் சவூதி ரியால், 75 ஆயிரம் டிராம் என்பன இவ்வாறு சிக்கியுள்ளன.

* * *

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவத்தில் தொடங்கி அண்மையில் தெற்கில் தேவாலயம் ஒன்றில் கண்டு பிடிக்கப்பட்ட வெடிகுண்டு வரையான விவகாரங்களில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி அரசுக்கு எதிராகக் காட்டமாகப் பிரசாரம் செய்து வருபவர்கள் என்று கூறப்படும் சமூக ஊடகப் போராளிகளுக்கு எதிராக அதிரடி நடவடிக்கைகளை எடுக்கப் பாதுகாப்புத் தரப்பினர் தயாராகி வருகின்றனர் என ஒரு செய்தி கிடைத்தது.

அடுத்து வரும் வாரங்களில் - அல்லது நாள்களில் - பல கைதுகள் இடம் பெறலாம் எனத் தெரிகின்றது.

அடுத்த மாதம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்துக்கு முன்னர், கவுன்ஸில் கூட்டத்தில் பேசப்பட வேண்டிய - கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான - பல அத்துமீறல்கள் இங்கு அரங்கேற வாய்ப்புண்டு என்றே தோன்றுகின்றது.

* * *

மூன்றாவது ஊசி போட்டதன் பின்னரும் கொரோனா வைரஸ் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளது.

உள்நாட்டில் பொதுசனப் பாதுகாப்பு அமைச்சர சரத் வீரசேகரா கொரோனாக்கு இலக்கானமை தெரிந்ததே.

நிதி அமைச்சர் அலி சப்றீ வெளிநாடு சென்றிருந்த போது அங்கு கொரோனாவுக்கு இலக்காகி தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார் என்று தெரிகின்றது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று ஒரு கூட்டத்தில் தமது சகாவான நீதி அமைச்சரின் நிலை பற்றிய தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

- மின்னல் -






# தமிழ் மக்களின் அபிலாஷை, உரிமைகளை கோட்டாவுக்காக ஒதுக்கிவைக்கமுடியாது

## நாடாளுமன்றில் சித்தார்த்தன் எம்.பி. காட்டம்



கொழும்பு, ஜன. 21

தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிப்பதே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கொள்கையாகும். எனவே அதனை ஒதுக்கி வைத்து விட்டு வருமாறு ஜனாதிபதி கோட்டாபய கோரியமை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

தமிழினத்தின் கொள்கைகளுக்கான பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பலிகொடுக்கப்பட்டுள்ளன.

போர் முடிவடைந்து சமாதானம் கொண்டு வரப்பட்டதாக ஜனாதிபதி கூறியதையும் ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் சித்தார்த்தன் குறிப்பிட்டார்.

# மகளீர் அபிவிருத்தி நிலைய மாணவர்களின் கண்காட்சி!

## வவுனியாவில் நடந்தது



வவுனியா மகளீர் அபிவிருத்தி நிலைய மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு கடந்த புதன்கிழமை உள்வட்ட வீதியில் அமைந்துள்ள பலநோக்கு பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

மகளீர் அபிவிருத்தி நிலைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட கைவினைப்பொருள்கள், ஆடைகள் உட்பட பல்வேறு விதமான பொருள்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டதுடன், இந்தக் கண்காட்சியை கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் இ.சசீலனால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.ரஜீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் இ.சசீலன், வவுனியா உதவி பிரதேச செயலாளர் ச.பிரியதர்சினி, மற்றும் அரச அதிகாரிகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# புத்தபெருமானாலோ கோட்டாபயவாலோ நாட்டை இனி முன்னேற்றவே முடியாது!

## கஜேந்திரன் எம்.பி. சாடல்



கொழும்பு, ஜன. 21

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரையில் இனப்பிரச்சினை தொடர்பில் எவ்வித தீர்வுகளையும் முன்வைக்கவில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கடுமையாகக் குற்றம்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1948, 72 மற்றும் 78 களில் இலங்கையில் கொண்டுவரப்பட்ட அரசமைப்பு மாற்றங்களை நிராகரித்த தமிழ் மக்கள், சமஷ்டித் தீர்வைக்கோரியே போராடி வருகின்றனர்.

இந்தநிலையில் 1980 முதல் மேற்கொள்ளப்பட்ட தமிழ் மக்கள் மீதான இன அழிப்பில் ஜனாதிபதிக்கும் பங்குண்டு என்று கஜேந்திரன் குறிப்பிட்டார்.

இலங்கையில் சுயநிர்ணயத்தை வலியுறுத்தி தமிழர்களின் போராட்டத்தை மறைத்து வெறும் பொருளாதார பிரச்சினை மாத்திரமே நாட்டில் இருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார் எனக் கஜேந்திரன் குற்றம் சுமத்தினார்.

தமிழ் மக்களுக்கான தீர்வை 13 ஆம் திருத்தத்தின்கீழ் முடக்கிவிட முடியாது. வடக்கின் மயிலிட்டி இன்று தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்டு சிங்களவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

மயிலந்தமடு சிங்களவர்கள் வசமாக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காணாது, புத்தபெருமானாலோ அல்லது கோட்டபயவாலோ, முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லமுடியாது என்றும் கஜேந்திரன் தெரிவித்தார்.

# பொதுமக்கள் குறைகள் கேட்கும் வேலை வடக்கில் இனி அரச உத்தியோகத்தருக்கு!

## ஆளுநர் ஜீவன் தெரிவிப்பு



வடக்கில் இனி அரச உத்தியோகத்தர்கள் பொது மக்களின் குறைநிறைகளைக் கேட்டறியும்வேலைத் திட்டம் விரைவில் உருவாக்கப்படும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வடமாகாண ஆளுநராக நான் கடமைகளைப் பொறுப்பேற்று மூன்றுமாதங்களுக்கு மேலாகிறது. எனக்கு ஒவ்வொரு நாளும் 20 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கின்றன. சிலர் நேரிலும் வந்து என்னைச் சந்திக்கின்றார்கள்.

என்னைச் சந்திக்க வருபவர்கள் சிறுசிறு பிரச்சினைகளோடு வருகின்றார்கள். அந்தப் பிரச்சினைகள் அனைத்தும் சாதாரண மட்டப் பிரச்சினைகள். அதாவது கிராம சேவையாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாகத் தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள்.

ஆனால், அவர்களால் தீர்க்கப்படாதவிடத்து என்னிடம் வருகின்றார்கள். நான் என்னிடம் வருபவர்களைத் திருப்பி அனுப்ப முடியாது. அவர்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். இதற்குப் பிறகு நான் ஒரு முடிவு எடுத்துள்ளேன்.

அதாவது அரச உத்தியோகத்தர்கள் இனிமேல் அலுவலகங்களில் மட்டும் கடமை புரியாது மக்களிடம் சென்று மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து எனக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்ற வேலைத்திட்டத்தை விரைவில் ஆரம்பிக்க உள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ள பனைசார் உற்பத்திக் கண்காட்சி!



பனைசார் உற்பத்தி பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி அவர்களை கௌரவிக்கும் நிகழ்வும், பனைசார் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி நிகழ்வு காரைநகர் பிரதேச சபையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

பனைசார் உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாக பனைசார் உற்பத்தி பயிற்சி நெறி பிரதேச சபையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது. அந்தப் பயிற்சி நெறியின் நிறைவில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது முதல் மூன்று இடங்களில் உள்ள உற்பத்திப் பொருள்களைச் செய்த மூவர் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காரைநகர் பிரதேச சபையின் செயலாளரான கி.விஜயேஸ்லரன் தலைமை தாங்கிய இந்த நிகழ்வில் பிரதேச சபையின் தவிசாளர் ம.அப்புத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் பிரதேச சபையின் உறுப்பினர்கள், பிரதேசசபையின் ஊழியர்கள், பனைசார் உற்பத்தி பயிற்சியாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# நகர கூட்டுறவு கிளை கந்தளாயில் திறப்பு

திருகோணமலை – கந்தளாய் நகரக் கூட்டுறவு கிளை வைபவ ரீதியாக கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. கந்தளாய் நகரில் சிறந்த வசதிகளுடன் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் திருகோணமலை மாவட்ட நாடளுமன்ற உறுப்பினரால் மேற்படி கிளை திறந்து வைக்கப்பட்டன.

இந்த மாவட்டத்தில் நான்கு நகரங்களில் நகரக் கூட்டுறவுக் கிளைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. கந்தளாயில் 23 கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் நகரக் கூட்டுறவு கிளை திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராத ஜகம்பத், திருகோணமலை மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரல மற்றும் கூட்டுறவு திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பலாலி மீளத் திறக்குமா?

**“பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் மற்றொரு முனையத்தை அமைக்குமாறும், விமான ஓடு பாதையை விரிவாக்கி, அபிவிருத்தி செய்யுமாறும் இலங்கை அரசைக் கோரியுள்ளோம். ஆனால் அவர்களிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை.”**

**– இப்படி இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே கூறியிருக்கின்றார்.**

**இந்தியத் தூதுவரைக் கடந்த செவ்வாயன்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.**

**பலாலி சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி தொடர்பாக கொழும்பு ஆட்சிப் பீடத்திலிருந்து திட்டவட்டமான – தெளிவான – பதில் இல்லை என்பது இந்தியத் தூதுவரை விசனமடைய வைத்திருக்கின்றது. அவரின் பதிலில் அந்த விடயம் வெளிப்படையாகத் தொக்கி நிற்கின்றது.**

**பலாலி சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதை மட்டுமல்ல, மீண்டும் சர்வதேச விமான நிலையமாக அதைத் திறக்கும் எண்ணம் கூட கொழும்புக்கு இல்லை என்பதுதான் நிதரிசனம். உண்மை.**

**அதைப் புரியாதவராக – நாட்டு நடப்புகள் விளங்காதவராக – கொழும்புக்கான இந்தியத் தூதுவர் பேசுவார் என நாம் நம்பவில்லை.**

**மிகுந்த இழுபறிகளுக்கும் பின்னர் – கடும் அழுத்தங்களுக்கு மத்தியிலேயே – நல்லாட்சி காலத்தில் பலாலி சர்வதேச விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டது.**

**அதுவும் கூட தமிழர் தரப்பும், இந்தியாவும் விடாது கொடுத்த நச்சரிப்பில்தான் அது நடந்தது.**

**ஆரம்பத்தில் இருந்தே பலாலியை மீண்டும் சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதில் கொழும்புக்கு உடன்பாடில்லை என்பது வெளிப்படையானது.**

**பலாலி சர்வதேச விமான நிலையம் இயங்க ஆரம்பித்தால், இலங்கையின் வடக்கு யாழ்ப்பாணம் பல்வேறு வகைகளிலும் கேந்திர நிலையமாக முன்னேறி விடும் – மேம்பட்டு விடும் – என்ற எரிச்சல், விருப்பமின்மை கொழும்புக்கு.**

**வடக்கு யாழ்ப்பாணத்தை ஒட்டி வர்த்தக விடயங்கள், சுற்றுலா மேம்பாடு ஆகியன முதற்கொண்டு மருத்துவ வசதிகள், வெளிநாட்டுப் பணப் பரிவர்த்தனை வரை யாவும் கொழும்பை விடுத்து யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு செயற்படத் தொடங்கிவிடும்.**

**வடக்குத் தமிழர்கள் ஏற்கனவே வலிமையான புலம்பெயர் சமூகக் கட்டமைப்பின் பின்னணியைக் கொண்டவர்கள். கொழும்பை நாடுவதை விடுத்து, அவர்களுக்கென, அவர்களின் பிரதேசத்திலேயே சர்வதேச விமான நிலையம் என்ற வாசலைத் திறந்து விட்டால், அதனூடாக வடக்கும் வளர்ந்து விடும். வடக்குக்கு வடக்கே உள்ள தமிழகம் – குறிப்பாக சென்னை – கேந்திர மையமாக மாறிவிடும் என்ற காழ்ப்புணர்ச்சி கொழும்புக்கு.**

**அதனால்தான் கொரோனாவைக் காட்டி, பலாலி சர்வதேச விமான நிலையத்தை ஒரேயடியாகப் பூட்டுப்போட்டு மூடிய கொழும்பு, நிலைமை வழமைக்குத் திரும்பியும் பலாலி சர்வதேச விமான நிலையத்தைத் திறக்காமல், சாக்குப் போக்குச் சொல்லி காலத்தை இழுத்தடித்து வருகின்றது. அதே நேரம் உள்ளூர் விமானப் போக்குவரத்துக்கான விமான நிலையமான கொழும்பு இரத்மலானையிலிருந்து புதிதாக சர்வதேச விமான சேவைகளை ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கின்றது.**

**தமிழர்களின் தாயக பூமியான வடக்கு மேம்படுவதற்கான எந்த முக்கிய திட்டத்துக்கும் ஆப்பு வைப்பதே கொழும்பில் சிந்தனையாகவும், இலக்காகவும் இருக்கும் என்பது புரிந்து கொள்ளத் தக்கதே.**

**காங்கேசன்துறை – காரைக்கால் படகுச் சேவையாக இருக்கட்டும், பலாலிக்கான சர்வதேச விமான சேவையாக இருக்கட்டும், அவை சாத்தியப்படாமல் இருப்பதற்கான முட்டுக்கட்டையை ஏதேனும் வழிகளில் தேடிப்பிடித்துப் போடுவதில் தான் கொழும்பின் மாறாத சிரத்தையும், ஈடுபாடும் இருக்கும் என்பது உண்மையாகும்.**

# மக்கள் பொருள்களுக்காக வரிசையில் நிலவைப் பிடிக்கும் ஜனாதிபதியின் உரை

## கயந்த கருணாதிலக எம்.பி. சாட்டை




நாட்டில் மக்களுக்கு உணவுப்பஞ்சம் ஏற்பட்டு அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள வரிசையில் நின்று போராடிக்கொண்டுள்ள நிலையில் அதற்கான தீர்வுகளை முன்வைக்காது நிலவைப் பிடிக்கும் கதைகளைக் கூறுகின்றமை போன்று ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை அமைந்துள்ளது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக சபையில் தெரிவித்தார்.

அரசியல் சுய நலன்களுக்காக மக்களைத் தூண்ட வேண்டாம் எனக் கூற ராஜபக்ஷவினருக்கு எந்தத் தகுதியும் இல்லை எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு -

ஜனாதிபதி ஒருவர் நாடாளுமன்ற மூலாசனத்தில் அமர்ந்திருந்து ஆற்றும் உரையை அக்கிராசன உரையெனக் கூறுவோம். ஏனென்றால் அந்த உரை மிகவும் முக்கியமானதாக அமைந்திருக்கும்.

அவ்வாறு ஆற்றும் உரையில் பொறுப்புக் கூறல் மற்றும் பெறுமதி இருக்கும். ஆனால், இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் ஜனாதிபதி சபையில் உரையாற்றியுள்ளார்.

ஆனால், இரண்டு ஆண்டுகளில் அவர் கூறிய எதுவுமே உறுதியாக நடைமுறைப் படுத்தப்படவில்லை. காலை ஒன்றும் பின்னேரம் ஒன்றையும் கூறுவார், வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்படும் பின்னர் அது திருத்தப்படும்.

இவ்வாறு எந்தவித உருப்படியான தீர்மானமும் எடுக்காது இரண்டு ஆண்டுகள் கடத்தப்பட்டுள்ளன.

அடுத்த மூன்று ஆண்டுகளில் சிறப்பாகச் செய்து காட்டுவேன் எனக் கூறுகின்றார். ஆனால், அவரது உரையில் மக்களுக்கு எந்த நன்மையும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகள் இல்லை என்பது தெட்டத்தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

மார்ச் மாதத்தில் உணவுத் தட்டுப்பாடு, மின் தட்டுபாடு, எரிபொருள் தட்டுப்பாடு, மருந்துத் தட்டுப்பாடு, வெளிநாட்டுக் கையிருப்புத் தட்டுப்பாடு ஏற்படப்போகின்றது. இதற்கு என்ன தீர்வு என்ற எதனையும் ஜனாதிபதி கூறவில்லை. இந்த நாட்டில் ஒரு வேளை உணவுக்காகக் கஷ்டப்படும் மக்கள் குறித்து ஒரு வார்த்தையேனும் கூறாது நிலவைப் பிடிக்கும் கதையாகவே அவரது உரை அமைந்திருந்தது.

அரசாங்கத்துக்கு எதிராக பாடல் உருவாக்கியவர்களை, ஈஸ்டர் தாக்குதலுக்கு நியாயம் கேட்ட நபர்களை, ஜனாதிபதிக்கு எதிராக விமர்சனக் கருத்துக்களை முன்வைத்தவர்களை குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குக் கொண்டு சென்றனர்.

ஆனால், எரிவாயு வெடிப்புக்குக் காரணமானவர்களை, சீனாவில் இருந்து குப்பை உரத்தைக் கொண்டுவந்தவர்களை, ஒன்றுக்கு நான்கு மடங்கு வீதத்தில் இந்தியாவில் இருந்து உரம் இறக்குமதி செய்தவர்களை ஏன் குற்றப்புலனாய்வு பிரிவுக்குக் கொண்டு செல்லவில்லை. இதுதான் ஜனாதிபதியின் வேலைத்திட்டமாக அமைந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட சகல நெருக்கடிக்கும் கொரோனாவே காரணம் எனக் கூற முயற்சிக்கின்றனர், ஆனால், எம்மை விடவும் கீழ் மட்டத்தில் இருந்த நாடுகள் கொவிட் காலத்தில் முன்னேறியுள்ளன.

இங்கு தடுப்பூசியிலும் ஊழலே இடம்பெற்றது. அரசியல் சுய நலன்களுக்காக மக்களைத் தூண்ட வேண்டாம் என அவர் கூறினார், ஆனால், அதனைக் கூற ராஜபக்ஷவினருக்குத் தகுதி இல்லை.

அரசியல் தேவைக்காக இனவாதத்தையும் அடிப்படை வாதத்தையும் தூண்டி மக்களைக் குழப்பி செயற்பட்டது யார் என்பதைப் புதிதாகக் கூற வேண்டியதில்லை. அவர்கள் உருவாக்கிய பாதையில் இன்று அவர்களுக்கே நெருக்கடி ஏற்பட்டுள்ளது. - எனவும் அவர் கூறினார்.

# தென் கொரிய சபாநாயகர் இலங்கை 4 நாள் விஜயம்




தென் கொரியாவின் தேசிய சட்டமன்ற சபாநாயகர் பார்க் பியோங் - செங் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

பார்க் பியோங் - செங் அடங்கலான 18 பேர் கொண்ட குழுவினர் புதன்கிழமை இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர் என விமான நிலைய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்தக் குழுவினரை இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வரவேற்றார்.

இந்த விஜயத்தின் போது, பார்க் பியோங் - செங் தலைமையிலான தென்கொரிய தூதுக்குழுவினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பல முன்னணி அரசியல் தலைவர்களைச் சந்திக்கவுள்ளனர்.

இந்த விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால இருதரப்பு உறவுகளை மேலும் புதுப்பிக்கும் மற்றும் நட்புறவை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் அமைந்துள்ளது.

# மெழுகுவர்த்தியின் விலை சடுதியாக அதிகரித்தது!

நாட்டில் மெழுகுவர்த்திகளுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவியுள்ளது.

நாடளாவிய ரீதியல் கடந்த சில நாள்களாகத் தொடர் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப் பட்டு வரும் நிலையில், மக்கள் அதிகளவில் மெழுகுவர்த்தியைக் கொள்வனவு செய்து வருகின்றனர். இதன் காரணமாக இவ்வாறு மெழுகுவர்த்திகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், மெழுகுவர்த்தி ஒன்றின் விலையை 15 ரூபாவால் அதிகரித்துள்ளதாகவும் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மெழுகுவர்த்தியை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் ஏனைய பொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாகவே இவ்வாறு மெழுகுவர்த்தி விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹேமசிறி பெர்னான்டோ தொடர்பில் பெப்ரவரி 18 ஆம் திகதி தீர்ப்பு



கொழும்பு, ஜன. 21

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில், தகவல்கள் அறிந்தும் அது தொடர்பில், உரிய நடவடிக்கை எடுக்காமைக் குறித்து, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ எதிரான வழக்கில் இருந்து அவரை விடுதலை செய்வதா இல்லையா என்பது தொடர்பில் பெப் ரவரி மாதம் 18 ஆம் திகதி தீர்ப்பளிக் கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




# ஜேர்மனியில் இலங்கைத் தூதுவர் சிறப்புரிமைகளைத் துஷ்பிரயோகம்!

ஜேர்மனியிலுள்ள இலங்கை தூதுவர் மனோரி உனம்புவே தனது இராஜதந்திர சிறப்புரிமைகளை துஷ்பிரயோகம் செய்கிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் ஜேர்மனியில் உள்ள இலங்கையர் களிடம் இருந்து வெளிவிவகார அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனச் செய்தி வெளியாகியுள்ளது.

அவரது விலையுயர்ந்த வீட்டுக்கு மாதம் 15 ஆயிரம் யூரோக்களும், வீட்டின் பராமரிப்புப் பொறுப்பை ஏற் றுக்கொண்ட இரண்டு தொழிலாளர்கள் மற்றும் தோட்ட முகாமையாளர் ஒருவருக்கு மாதம் 8 ஆயிரம் யூரோக்களும் செலுத்த வேண்டிய நிலைமை இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அவர் நியமிக்கப்பட்டு இரண்டு வருடங்களில் இலங் கைக்காக அவரால் எந்த வேலையும் செய்யப்படவில்லை, பல மாதங்களாக அவர் அலுவலகத்துக்கு வரவில்லை, அவருடைய அனைத்து வேலைகளும் அலுவலக ஊழியர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்ற தெனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவரது இந்த பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக வெளிநாட்டு கடவுச்சீட்டுகள் தொடர்பில் ஊழல் மற்றும் மோசடி நடவடிக்கைகள் இடம்பெற ஆரம்பித்துள்ளன எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, அவரது சகோதரன் பேர்லினில் நடை பெற்ற வர்த்தக கண்காட்சியில் பல வர்த்தகர் களை ஏமாற்றியுள்ளார் எனவும், தூதுவரின் பெயரைப்பயன்படுத்தி பல்வேறு வர்த்தகர்களின் உதவியை நாடியுள் ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் சகோதரி யின் பதவியை தவறாக பயன்படுத்திய சகோதரன் ஜேர்மனியில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்தார் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனின் தொழிலதிபர் ஒருவரால் பலமுறை முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து அவர் நாடு கடத்தப்பட்டார் எனவும் கூறப்படுகிறது. இதேவேளை, தற்போது தனது பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்க முயற்சித்து வரும் அவர், கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறையின் போது இலங்கையில் தங்குவதற்காக வெளிவிவகார அமைச்சில் 35 நாள்கள் விடுமுறையைப் பெற்றுள்ளார்.



# தமிழர் தலைமை; வெறுமையில் இருந்து, வெற்றிடத்தை நோக்கி......!

## அக்கரை / அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

அண்மையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்புவதாகத் தமிழர் தலைமைகள் அடித்த கூத்து, அவர்கள் இடையேயான வேற்றுமையை மீண்டும் ஒரு முறை வெளிக்கொணர்ந்தது. அந்த வேற்றுமை. தமிழர் தலைமையை ஆட்டிப்படைக்கும் வெறுமையின் வெளிப்பாடே. இவை இரண்டுமே, எதிர்நோக்க இருக்கும் நோயின் அறிகுறிகளே. உண்மையான நோயின் பெயர், வெற்றிடம். அதன் விளைவுகளை தமிழர் சமுதாயம் அடுத்த ஐந்து முதல் பத்து ஆண்டுகளுக்கு உள்ளாக எதிர்நோக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். அதற்கு மருந்தோ, மாற்றோ இல்லை என்பதும் நிகழ்கால நிதர்சனம்.

இனப்போர் காலத்தில், தமிழர் தலைமை, விடுதலை புலிகள் இயக்கத்தை அண்டி, அதன் தலைவர் பிரபாகரனோடு ஐக்கியமாகியது. அதுவும் காலத்தின் கட்டாயமே. அந்த இயக்கத்திற்காக, தனி ஒரு அரசியல் கட்சியைத் துவங்கி, அது பயன்படாமல் போனபோது. துவங்கப்பட்டதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அது, விடுதலை புலிகள் இயக்கத்தால் ஆரம்பிக்கப்பட்டதா, இல்லையா,



என்பது இப்போதும் ஒரு விவாத பொருளே. ஆனால், போர் முடிவில், விடுதலை புலிகள் இயக்கம் காணாமல் போன போது. மாறுபட்ட சூழலில் தமிழ் மக்களை அரசியல் ரீதியாக மீண்டும் வழி நடத்த கூட்டமைப்பு இருந்தது, அரசும், தென்னிலங்கை அரசியல் தலைமைகளும், சர்வதேச சமூகமும் கூட ஏற்றுக் கொண்ட உண்மை.

ஆனால், இன்றைய நிலைமை என்ன? பல்வேறு தமிழர் கட்சிகளில், விடுதலை புலிகள் காலத்திய தலைமைகளே, பதவியில் இருக்கின்றன. இதில் விதி விலக்கு, விக்னேஸ்வரன், சுமந்திரன் மற்றும் வைத்தியர் சத்தியலிங்கம் போன்றோர் மட்டுமே. இதில், விக்னேஸ்வரனும் வயதில் மூத்தவர். சுமந்திரனுக்கு கூட்டமைப்பின் சர்வதேச பேச்சாளராகப் பொறுப்பு கொடுத்து, அவர் தலைநகர் கொழும்பில் பெரும்பாலும் அரசியல் செய்ய வேண்டியதால் மட்டுமே, தாக்கு பிடிக்கின்றார்.



சுமந்திரனும் சரி, அவரை விட இளைஞரான சத்தியலிங்கமும் சரி, எதிர்காலத்தில் தமிழருக்கான ஓர் ஒன்றுபட்ட தலைமையை ஏற்று, வழிநடத்தி செல்வது நடைமுறை சாத்தியமில்லாதது என்றே தோன்றுகிறது.

கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன், வயது மூப்பு மற்றும் உடல்நிலை காரணமாக, முழுமையாக செயல்பட முடிவதில்லை. அவரை போல் இல்லை என்றாலும், கூட்டமைப்பின் அனைத்து உறுப்புக் கட்சிகளின் தலைவர்களும் கூட என்றும் வாழும் சிரஞ்சீவிகள் இல்லை. அவர்களுக்கும் வயதும், நோயும் வருவது இயற்கையின் பரிசே.

### ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

ஆனால், அவர்கள் தலைமை வகிக்கும் கட்சிகளின் நிலைமை என்ன? அவர்களில் எந்த ஒரு கட்சியை எடுத்துக்கொண்டாலும், அதன் தலைமையில் புதிய இரத்தம் இல்லை என்பதே அப்பட்டமான உண்மை. அதற்காக, மாவை சேனாதிராஜாவோ, சித்தார்த்தனோ, செல்வம் அடைக்கலநாதனோ இளம் தலைமுறையினருக்கு இடம் விட்டு, தாங்கள் வீட்டில் முடங்க வேண்டும் என்பது அல்ல பொருள்.

மாறாக, தாங்கள் செயல்வீரர்களாக இருக்கும் போதே, தங்கள் கட்சிகளுக்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட தலைவர்களை அடையாளம் கண்டு, அவர்களை, அரசியல் ரீதியாக பக்குவபடுத்தி, தங்கள் காலங்களுக்கு பின்பு, தலைமையில் வெற்றிடம் தோன்றாதவாறு, கட்சியை காப்பாற்றி முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே, சமகால தேவை.

ஆனால், தனக்கு கூஜா தூக்கி, எடுபிடி வேலை செய்பவர்களை மட்டுமே தமிழர் அரசியல் தலைமைகள் நம்புகின்றன. அவர்களையும், இரண்டாவது, மூன்றாவது பொறுப்புகளுக்கு கொண்டுவரவும்



தற்போதைய தலைமைகள் தவறிவிட்டன. அதனை அவர்கள் விரும்பவில்லை என்பதே உண்மை. எங்கே, தங்களை மிஞ்சி அவர்கள் வளர்ந்து, வளர்த்த கடா மார்பில் பாயும் கதையாக முடிந்து விடுமோ, என்ற பயமும் அதற்கு ஒரு காரணம். இது தற்போதும் பல்வேறு தமிழ் கட்சிகளினுள் அரங்கேறி வருகிறது. இது உலக அளவிலும் உண்மையே.

இதில், தமிழரசு கட்சி மற்றும் கூட்டமைப்பில் நாம் காண்பது, அனைத்து தமிழர் தரப்பு கட்சியினருக்கும் பொருந்தும். தமிழரசு கட்சியையே எடுத்துக் கொண்டாலும், அங்கு வயது மூத்த, தலை நரைத்த முக்கியஸ்தர்கள் தவிர பிறர் தலையெடுப்பதற்கு வாய்ப்பே இல்லை. சர்வதேசத்தை விடுங்கள், தலைநகர் கொழும்பில் கூட, குறிப்பிட்ட ஐந்தாறு தமிழரசு மற்றும் கூட்டமைப்பு தலைவர்களின் பெயர்களே அறியப்படுகிறது.

தற்போது. கூட்டமைப்பிற்கு பத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தாலும், இதுவே உண்மை நிலை. முன்பு





பதினாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்த போதும் இந்த நிலைமைதான் இருந்தது. இந்த சாபகேட்டிற்கு விதி விலக்காக இந்த நாடாளுமன்றத்தில் அறியப்பட்ட பெயர், சாணக்கியன். அவர் சிறந்த பேச்சாளர். நாடாளுமன்றத்தில், முஸ்லிம் மக்களின் உரிமை குறித்து பேசியதால் மட்டுமே அவர் அடையாளம் காணப்பட்டார்.

ஆனால், முப்பது வயதான அந்த இளைஞரை அரசியலில் காணாமல் போக செய்வதற்கு உள்வீட்டிலேயே முயற்சிகள் நடப்பதாகக் கேள்வி. இது தவிர, சிறந்த பேச்சாளருக்கு அப்பால், சாணக்கியனுக்கு, எதிர்கால தமிழ் அரசியல் தலைமைத் துவத்தை ஏற்றுக் கொள்வதற்கான அடிப்படை திறமை இருக்கிறதா என்பது வேறொரு விடயம். ஆனால், அவ்வாறு இருக்குமென்றால், அதனை வழிநடத்தி முன்னெடுத்து செல்ல தலைமைத்துவத்தில் எவருமே விரும்புவதாகவோ, முயற்சி செய்வதாகவோ தெரியவில்லை. மாறாக, சாணக்கியனை முன்னிலைபடுத்திய 'பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை'யிலான நடைபயணத்தின் முடிவில் அவரை சிறுமைப்படுத்தும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன என்பதே உண்மை.

இது சாணக்கியன் ஒருவரை பற்றியது மட்டுமல்ல. அவரை போலவே, தமிழரசு மற்றும் கூட்டமைப்பில் உள்ள வேறு சிலரையும் குறித்ததே. கடந்த சில வருடங்



களாகவே, ஸ்ரீதரன் மாஸ்டர் போன்றோர், பல்வேறு அவதாரங்களை எடுத்துப் பார்த்தாலும், அவை எவையுமே எடுபடவில்லை. அல்லது, அவர்களது முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது. அல்லது, அவரை அரவணைத்துச் சென்று பின்னர் காலை வாரிவிடும் முயற்சிகளும் அரங்கேறின. அவரும் இது போன்ற அரசியலையே தொடர்ந்து செய்து வருகிறார்.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல், தமிழரசில் நடப்பது தான், பிற தமிழ் கட்சிகளிலும் அரங்கேறி வருகிறது என்பது வருத்தப்பட வேண்டிய விடயம். இதில், கூட்டமைப்பிற்கு வெளியே உள்ள தமிழர் கட்சிகளும் அடக்கம். பத்தாண்டுகளுக்கும் குறைவான காலத்தில், தமிழரசு அல்லது கூட்டமைப்பில் சேர்ந்த அனந்தி சசிதரன், விக்னேஸ்வரன் போன்றோர், தங்களுக்கான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்று கருதி, வெளியேறினார்கள். இருவரில், விக்னேஸ்வரன், அனந்திக்கு அவர் எதிர்பார்த்த முக்கியத்துவம் தரவில்லை. அனந்தி வெளியேறினார். ஆனால், அவர்கள் இருவருமே தத்தமது கட்சிகளில் வேறு யாருக்கும் முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரியவில்லை.

இதுபோன்றே, கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய ஈ.பி.ஆர்.எல்.எவ்ம் கட்சியின் தலைவரான சுரேஷ் பிறேமசந்திரனும் அடுத்த கட்ட தலைவர்களை இன்ன



மும் அடையாளம் காட்டவில்லை. முன்னர் கூட்டமைப்பில் இருக்கும் போது, போருக்கு பிந்தைய காலகட்டத்தில், அந்த கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ள கூடாது என்பதில் பிடிவாதமாக இருந்து வெற்றியும் கண்டவர். ஆதனால், கூட்டமைப்பு கழுதை தேய்ந்து கட்டெறும்பானதை தவிர அவர் வேறு எதையும் சாதித்து விடவில்லை.

இவர்கள் எல்லோரும் இப்படி என்றால், அண்மையில் கூட்டமைப்பினுள் தமிழரசின் தலைமைத்துவத்தை எதிர்த்து பதிமூன்றாம் திருத்தத்தை முன்னிறுத்தி அரசியல் செய்ய முயன்று தோல்வி அடைந்த செல்வம் அடைக்கலநாதனும், ரெலோ அமைப்பை தனது சொந்த கட்சியாகவே நடத்தி வந்துள்ளார். என்ன, அவர் குட்டையை கலக்கப் போய் அவரிடமிருந்து பிரிந்து சென்று அரசியல் செய்து வந்த ஸ்ரீகாந்தாவும், சிவாஜிலிங்கமும், தற்போது நேரடியாகவே புதிதாக உருவாகி வரும் – இந்தியாவை முன்னிறுத்தி அரசியல் செய்யும் – கையெழுத்து அமைப்பில் தங்களை ஐக்கியப்படுத்தி கொண்டார்கள்.

இவர்கள் அனைவருக்கும் அப்பால் சென்று நோக்கினால், மிகவும் பழமை



யான தமிழர் கட்சியை நடத்தி வரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், தனது நிழலில் பிற அரசியல் செடிகள் தோன்றி வளர்வதற்கு வழிசெய்பவராக தெரியவில்லை. யாழ்பாண மேயர் மணிவண்ணனின் கதை அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

(07ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் தலைமை; ......



(09ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**ஆதிக்க அரசியல், அறிவு ஜீவி அரசியல்**

உண்மையை சொல்லப்போனால், வடக்கு – கிழக்கு தமிழர்கள் தலைமையே, யாழ்பாண ஆளுமை அரசியலுக்கு அடிமையாகவே இருந்து வந்துள்ளது. அது ஜாதி அடிப்படையிலானது என்பதே உண்மை. பல்வேறு போராளி குழுக்கள் தோன்றிய காலத்திலும் அவற்றுக்கும் ஜாதி முலாம் பூசப்பட்டிருந்தது.

இதில் ஜாதி மட்டுமல்ல, மத அரசியலும் தனி இழையாக இணைந்து ஓடுகிறது. தந்தை செல்வா காலத்தில் அது செல்லுபடியாகவிட்டாலும், அண்மை காலத்தில் சுமந்திரனின் மத அடையாளத்தை சுற்றி, ஒரு மௌன அரசியல் அவிழ்த்து விடப்பட்டது. அதற்கும் அப்பால் சென்று, வடக்கு – கிழக்கு இடையேயான பிரிவினை அரசியலும் தொடர்ந்து வந்துள்ளது. அதனால் தான், வட்டுகோட்டை தீர்மானத்திற்கு பிந்தைய நாடாளுமன்ற தேர்தத்தில் வடக்கே சம்பந்தனும், கிழக்கே இராஜதுரையும் தோல்வியுற்றார்கள் என்று கருதப்பட்டது.

அவ்வாறு இல்லாதிருந்திருந்தால், 2013 ஆம் ஆண்டு வட மாகாண சபை தேர்தலில் சம்பந்தனே கூட கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கி இருப்பாரோ, என்னவோ! அவருக்கு, விக்னேஸ்வரன் என்ற வட மாகாண அறிவு ஜீவியை முட்டுகட்டையாக அழைத்து வருவதற்கான அவசியம் தோன்றியிராது. தமிழர் அரசியலின் தற்போதைய நிலைமையே வேறு பாதையில் பயணித்திருக்கலாம்.

இடைப்பட்ட காலத்தில், விடுதலை புலிகள், தமிழர் அரசியல் தலைமையை முழுமையாகக் கைபற்றியபோது, ஜாதி சார்ந்த ஆளுமை அரசியல் காணாமல் போய்விட்டதாக சிலராவது கருதினார்கள். ஆனால், இனப்போர் முடிந்த கடந்த பத்தாண்டுகளில் அரங்கேறி வரும் அலங்கோலங்களை பார்த்தால், விடுதலை புலிகள், இலங்கை இராணுவத்திடம் மட்டுமல்ல, இந்த ஒரு விடயத்திலும் உள்வீட்டு அரசியலில் தோற்றுவிட்டது என்பது புலப்படும்.

**கருணா கூறிய உண்மை?**

அந்த விதத்தில், விடுதலை புலிகள் இயக்கத்திலும் வடக்கு வாழ்ந்து, கிழக்கு தொடர்ந்து தேய்ந்து வந்ததாக கருணா கூறியதில் உண்மை இருந்தது. சிறிது பின்னோக்கி பார்த்தால், தந்தை செல்வா. கடந்த 1952 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் வட மாகணத்தில் தோல்வியுற்று, பின்னர், தனது தமிழரசு கட்சி அரசியலுக்கு அடித்தளம் அமைக்க கிழக்கு மாகாணத் தமிழர்களோடு கைகோர்க்க வேண்டிய நிலைமை உருவாகி இருக்காவிட்டால், வடக்கு – கிழக்கு இணைப்பு அரசியல் உருப்பெறாமலே போய் இருக்கும். அல்லது, இவ்வாறான கருத்து இன்றும் நிலவுகிறது. பலரும் அது குறித்து பொதுவெளியில் கருத்து கூறுவதில்லை.



அதனால் தானோ என்னவோ, தனது இணைந்த தமிழர் பிரதேசத்திற்கு திருகோணமலையே தலைநகராக இருக்கும் என்று அவர் கூறினார்.

என்றாலும், கடைசி போர் காலத்தில், இலங்கை இராணுவத்திற்கு எதிராக பின்வாங்கி வந்த விடுதலைப் புலிகள், யாழ்ப்பாணத்தை விட்டு, வன்னி பகுதிக்குள் சென்றடைந்தது ஏன் என்பது இன்னமும் புரியாத புதிராக உள்ளது. அவ்வாறு இல்லமால் இருந்திருந்தால், 'அர்பண் கொரில்லா' (நகர்ப்புற கரந்தடிப்படை) முறையில், விடுதலை புலிகள், இன்னமும் யாழ்பாணத்தை மையமாக வைத்து இராணுவத்தை எதிர்த்துப் போராடி வந்திருப்பார்கள் என்று கருதுபவர்களும் உள்ளனர். தொண்ணூறுகளின் முதல் பகுதியில் இவ்வாறான நிலையே நிலவியது.

ஆனால், யாழ் நகர வாழ்க்கை சீரழிந்திருக்கும் என்பது வேறு விடயம்.

இவை அனைத்திற்கும் ஊடாகச் செல்லும் உண்மை இதுதான். இனப்போருக்கு முந்தைய காலங்களில், தமிழர்கள் வடக்கை அடிப்படையாக கொண்டு. யாழ்ப்பாணம் சார்ந்த ஆதிக்க அரசியலில் ஆளுமை கொண்டிருந்தனர். அதுவே, அறிவு ஜீவி அரசியலாகவும் இருந்தது, தவறான முன்னுதாரணமாகி விட்டது. அந்த தலைமைகள், சமுதாயத்தின் கீழ் மட்ட தமிழர்கள், அவர்களுடைய அவசிய தேவைகள் ஆகியவற்றை கருத்தில் கொள்ளவில்லை என்பதே உண்மை.

ஏதோ, ஏ – லெவல் வரை நன்றாக படித்துவிட்டால், அரசு வேலை கிடைக்கும் என்று ஆதிக்க அரசியல் செய்தோர், ஓரிரு தலைமுறையினரை நம்ப வைத்தனர். சிங்களத்தில் மட்டுமே கல்வி கற்பது என்பது கட்டாயமான போது, தங்கள் பிள்ளைகள் இழக்கப் போகும் பல்கலைகழக கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை சுற்றியே அவர்களது அரசியல் இருந்தது.

அது போன்றே, 1971 ஆம் ஆண்டு, தரப்படுத்தல் முறையும் யாழ்பாண மாவட்டத்தையே பெரிதும் பாதித்தது. அது போன்றே சிங்களவர் மத்தியில், கொழும்பு மாவட்டத்தையும் பாதித்தது என்பதை யாருமே, எவருக்கும் எடுத்துரைக்கவில்லை. அதே சமயம், யாழ்பாணம் தவிர்த்து, வடக்கு மாகாணத்தின் பிற பகுதி மாணவர்கள் இந்த திட்டத்தால் பயன் பெற்றனர். கிழக்கு மாகாணம் முழுவதுமே கூட பயனடைந்தது.

ஆனால், இவை எவையுமே போராடி உயிரிழந்த தலைமுறையினருக்குத் தெரிந்திருக்கவில்லை என்று எண்ணத் தோன்றுகிறது. தற்போது போருக்கு பின்



னரான தலைமுறையினருக்கு எல்லாமே குழப்பமான விடயம் தான். அவர்களுக்கான கல்வி மற்றும் வேலைவாய்ப்புக் குறித்து, அவர்களிடையே இருந்து தோன்றியுள்ள ஊடகவியலாளர்கள் கூட கவலை படுவதில்லை. அவர்களுக்கான எதிர்காலம், வாழ்வாதாரம் ஆகியவை குறித்து அவர்கள் எவருமே கவலைபடுவதில்லை. மாறாக, அவர்களுடைய தலையில் மிளகாய் அரைப்பதுதான், தமிழர் அரசியல் தலைமைகள் தொடர்ந்து செய்து வரும் காரியம் என்பது தான் அப்பட்டமான உண்மை.

இதற்கு தற்போதைய சான்று, இந்திய பிரதமருக்காக இந்திய தூதுவர் கோபால் பாக்லேயிடம் கையளித்த கடிதத்தை குறித்து, அனைத்து தலைவர்களும் கையெழுத்திட்ட பின்னர் எழுந்த பிரச்சினை. இது. நான் பெரியவனா, அல்லது நீ பெரியவனா? என்ற அளவிற்கு மீண்டும் கீழிறங்கி வந்தது. இதில் தனி நபர் அரசியலுக்கு அப்பால் சென்று, வழக்கம் போல் தமிழரசு கட்சியே தலைமை பகுதிக்கு தகுதி உடையது என்ற வகையில் பிரசாரம் மீண்டும் கையெடுக்கப்படுகிறது.

இதற்கு சாட்சி சொல்ல (மட்டுமே) இந்தியாவை அழைப்பது போலவே அண்மை கால நிகழ்வுகள் தோன்றின. இதற்கு மாற்றாக யோசிக்க வேண்டுமென்றால், இந்தியாவின் பதின்மூன்று சார்ந்த கோரிக்கை மற்றும் அரசியலை உள்ளேயிருந்தே உடைத்து எறிவதே தமிழரசின் தலையாய கடமையாக மாறிவிட்டதோ, அல்லது மாற்றப்படுகிறதோ, என்ற எண்ணமே மிஞ்சி நிற்கிறது.

ஆனால், இந்நத் தலைவர்களில் எவருக்குமே, தமிழ் சமுதாயம், அடுத்த வேளை சோற்றிற்கு என்ன செய்யும்? இந்த கொரோனா பாதிப்பில் இருந்து எவ்வாறு பாதுகாக்கப்படும்? என்பது குறித்து எல்லாம் கவலையே இல்லை. அதற்கான திட்டங்கள் இல்லை. அது குறித்து ஒரு அறிக்கை விடவோ, அரசை சாடவோ, அல்லது போராட்டம் நடத்தவோ அவர்கள் கையில் சரக்கு இல்லை. அது குறித்து சிந்தித்து செயலாற்றுவதற்கான அடிப்படை தகுதியும் இல்லை. அதனை வளர்த்துக் கொண்டால் மட்டுமே, நிதி உள்ளிட்ட வட மாகாண அமைச்சகங்களில் கூட சிறப்பாக செயலாற்ற முடியும், அதனால் தமிழ் மக்கள் பயனுற முடியும் என்ற எண்ணமும் இல்லை.

பாவம், தமிழ் மக்கள்!




## தமிழக மீனவர்களின் படகு கடற்படையால் மூழ்கடிப்பு!

### அத்துமீறலைக் கண்டித்து காரைநகரில் இன்று போராட்டம்

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்படையின், வேகப் படகு மோதியதில், தமது படகொன்று கடலில் மூழ்கியுள்ளது எனவும், படகில் இருந்த 7 மீனவர்களும் கடலில் மூழ்கிய நிலையில் சக மீனவர்கள் அவர்களைக் காப்பாற்றியுள்ளனர் எனவும் தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தமிழக மீனவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 500 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் புதன் புறப்பட்ட மீனவர்கள், கச்சதீவுக்கு அருகில் மீன்பிடித்துக் கொண்டு இருந்த வேளை, இலங்கைக் கடற்படையினர் தமது வேகப் படகில் வந்து மீனவர்களைத் துரத்தினர்.

அதன்போது , தங்கச்சி மடம் பகுதியைச் சேர்ந்த வஸ்தியான் என்பவருக்குச் சொந்தமான படகுடன் கடற்படையினரின் படகு மோதியது. அதில் படகு கடலில் மூழ்கியது.

குறித்த படகில் இருந்த 7 மீனவர்களும் கடலில் மூழ்கிய நிலையில், சக மீனவர்கள் அவர்களை மீட்டு கரை சேர்த்தனர் – என்றனர்.

இதேவேளை , இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும், தமிழக மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்துமாறு வடக்கு மீனவர் சங்கங்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கைகளை விடுத்து வருவதுடன், போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர்.

காரைநகரில் இன்று வெள்ளிக்கிழமை தமிழக மீனவர்களின் அத்து மீறல்களைக் கட்டுப்படுத்தக் கோரி மீனவர் சங்கங்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -076 443 8622
காலைக்கதிர்



# சாத்தியமானதை ஏற்றுக்கொண்டு சாதிக்கும் வல்லமையோடு நாம் பயணித்தல் வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

தமிழ் மக்களுக்கான சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை தொடர்பாக நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் உரியவை வருமாறு:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்த ஆண்டுக்கான ஆரம்ப உரை நாட்டு மக்களுக்கு ஒளி வீசும் நம்பிக்கைகளை விதைத்திருக்கிறது.

வளர்ந்து வரும் நாடாகிய இலங்கைத்தீவு கொவிட் 19 காரணமாக எதிர்கொள்ளும் சவால்களை ஜதார்த்தமாகத் தனது உரையில் தெளிவு படுத்தியுள்ளார்.

சக கட்சிநாடாளுமன்ற உறுப்பினர்களின் சுயங்களை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதும், தனக்கு வாக்களிக்காத மக்களுக்கும் சேவைகள் தொடரும் என்ற அவரது பெருந்தன்மை மிக்க கூற்றுகளும் அவரது அரசியல் நிலைப்பாட்டைப் பறைசாற்றி நிற்கின்றன.

ஜனாதிபதி தனது உரையில், இனவாதத்தை நிராகரிக்கின்றோம் என்றும் நாட்டில் வாழும் சகல பிரஜைகளும் கௌரவத்துடன் வாழ்வதற்கும், அவர்களது அனைத்து உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்றும் திறந்த மனத்துடன் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பாக சக தமிழ்க் கட்சித் தலைமைகள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு அரசியல் தீர்வு தொடர்பாக நம்பிக்கையோடு செயலாற்ற முன்வர வேண்டும்.

அது மட்டுமன்றி கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கோட்டாபய ராஜபக்ஷவிடம் நாம் உரிமையோடும் தேசிய நல்லிணக்க ஒழுங்கு முறையிலும் முன்வைத்த விடயங்கள் தொடர்பாகவும் தனது உரையில் தெரிவித்துள்ளமை எமக்கு நம்பிக்கையைத் தருகின்றது.

காணாமல் போனோருக்கு நீதியும் பரிகாரமும் வழங்குவோம் எனத் தெரிவித்துள்ளார். சிறையில் வாடும் கைதிகளை விடுவித்து வருவது குறித்துப் பேசியுள்ளார். அது மட்டுமன்றி யுத்த காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தபோது, படையினரின் பயன்பாட்டில் இருந்த 90 வீதமான நிலங்களை விடுவிப்பதற்குத் தான் முயற்சி எடுத்தமை குறித்துப் பேசியுள்ளார்.

இதில் எனது பங்கோடு பல்லாயிரம் ஏக்கர் தமிழர் நிலங்களை அவர் விடுவித்துத் தந்திருக்கிறார் என்பதை நான் கூறி வைக்க விரும்புகிறேன். இன்னமும் விடுவிக்கப்படாத நிலங்களை விடுவிப்பதாகவும் அவர் தனது உரையில் உறுதியளித்துள்ளார். அனைத்து மக்களின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களை உருவாக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி சர்வதேச சமூகத்தினரால் முன்வைக்கப்பட்ட அவதானிப்புகள் குறித்தும் நியாமான முடிவுகளை எடுப்போம் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்புகளை தனது உரையில் யதார்த்தபூர்வமாகத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி, வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் வேறுபாடுகளைத் தற்காலிகமாகத் தவிர்த்து விட்டு, தான் எடுக்கும் வடக்கு கிழக்கு மக்களுக்கான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குமாறும் கேட்டுள்ளார்.

உரையை முழுமையாகப் படித்து முடித்தார்களோ, அல்லது செவி மடுத்தார்களோ தெரியாது. அதில் ஒன்றும் இல்லை என்றும், குப்பை என்றும் வழமை போல் கூச்சலிடத் தொடங்கி விட்டார்கள்.

13 ஆவது திருத்த சட்டத்தை துப்புத்தடியால் கூடத் தொட்டும் பார்க்க மாட்டோம் என்று நிராகரித்து விட்டு... இன்று சுடலை ஞானத்தில் அதையே தூசி தட்டி இந்திய பிரதமருக்கு அனுப்பி வைத்தவர்கள் இன்னும் பல ஆண்டுகள் கழித்து ஜனாதிபதியின் இன்றைய கொள்கைப் பிரகடனங்களையும் தூசு தட்டிப் பார்க்கக்கூடும்.



அரசியல் வேறுபாடுகளை ஒரு புறம் வைத்து விட்டு, வாருங்கள் முன்னோக்கி செல்வோம் என்றுதான் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். கொள்கையை ஒருபுறம் வைத்து விட்டு வாருங்கள் என்று கேட்டதாக அந்த உரையைத் திரிவுபடுத்தி கூச்சலிடுவோர்களிடம் கேட்கிறேன். முண்டாட்சியில் உங்கள் கொள்கையை விற்று யாரிடம் எதை பெற்றீர்கள்? மக்களிடம் இருந்து நீங்கள் அபகரித்த ஆணைக்கு என்ன மதிப்பளித்தீர்கள்?

இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி அலையும் ஞானசூனியங்களாக இருப்பதில் அர்த்தமில்லை. கண்மூடித்தனமாக சுயலாப அரசியல் நடத்துவதைத் தவிர்க்க வேண்டும் எனக் கேட்கிறேன்.

எள்ளை கொடுத்தால் எண்ணெய்தான் வேண்டும் என்று அடம் பிடிக்கும் அரசியல் சுயலாபங்களே தமிழ் மக்கள் மீது அவலங்களையும் அழிவுகளையும் சுமத்தியிருக்கிறது.

சும்மா இருக்க சுதந்திரம் வந்து சேராது. சாத்தியமானதை ஏற்றுக்கொண்டு சாதித்துக்காட்டும் வல்லமையோடு பயணிக்க வேண்டும்.

ஆகவே, ஜனாதிபதியின் உரையின் அர்த்தங்களை புரிந்து கொண்டு தமிழ் பேசும் மக்களின் வாழ்விலும் சுபீட்சமான ஒளி வீசும் காலத்தை உருவாக்க அனைத்து வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தயாராக வேண்டும் என நான் பகிரங்க அழைப்பு விடுக்கிறேன். - என்று தெரிவித்தார்.

# ஓமந்தை அரச அலுவலர்களுக்கு வீடமைப்பு திட்ட காணி உறுதிப் பத்திரங்கள் வழங்க நடவடிக்கை!

வவுனியா ஓமந்தை கிராம அலுவலர் பிரிவில் 234 ஏக்கர் காணியில் அமைக்கப்பட்டுள்ள அரச அலுவலர்களுக்கான வீடமைப்புத் திட்ட காணிகளை, உரியவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலகப் பிரதேசத்தில் ஓமந்தை கிராம அலுவலர் பிரிவில் 92.92 ஹெக்ரெயார் அளவு கொண்ட காணியில் அரச அலுவலர்களுக்கான வீடமைப்புக் கருத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

குறித்த கருத்திட்டத்தின் கீழ் அந்தக் காணியில் 711 காணித் துண்டுகள் பிரதேச செயலாளரின் பரிந்துரைக்கமைய அடையாளம் காணப்பட்டுள்ள பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அவற்றில் 215 குடும்பங்களுக்கு வீடமைப்புக்காக 5 லட்சம் ரூபா தேசிய வீடமைப்பு அதிகார சபையால் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி 9 வருடங்கள் கடந்தாலும் குறித்த பயனாளிகளுக்கு இதுவரை அந்தக் காணிகளுக்கான உறுதி வழங்கப்படவில்லை.

அதனால், குறித்த பயனாளிகளுக்கு காணி உரிமை மாற்று உறுதிப்பத்திரங்களை வழங்கும் வகையில் காணியை தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை குறித்த நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.


# ஜனாதிபதி கோட்டாவின் உரையை வரவேற்ற எதிர்க் கட்சி உறுப்பினர்!

கோட்டாபய ராஜபக்ஷவின் அக்ராசன உரை தொடர்பில் எதிர்க்கட்சி தமது ஆதரவை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார், இந்த ஆதரவை வெளியிட்டுள்ளார்.

கோட்டாபயவின் உரையில் பல்வேறு குறைகளை சுட்டிக்காட்டிய அவர், ஒரு விடயத்தில் மாத்திரம் அவருடைய கருத்துக்குத் தாம் ஆதரவை வெளியிடுவதாகக் குறிப்பிட்டார்

இலங்கையின் அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களை அமைக்கும் விடயம் தொடர்பில் அவர் வெளியிட்ட கருத்தைத் தாம் வரவேற்பதாக குறிப்பிட்ட மரிக்கார் அந்த யோசனைக்கு தாம் தனிப்பட்ட ரீதியில் ஆதரவைத் தெரிவிக்கிறார் எனவும் கூறினார்.



இதன்மூலம் அதிகளவானோர் பல்கலைக்கழகம் செல்லமுடியும். வெளிநாடுகளுக்கு செலவழிக்கப்படும் நிதி கட்டுப்படுத்தப்படும் மற்றும் வெளிநாட்டு வருமானம் கிடைக்கும் என்றும் மரிக்கார் தெரிவித்தார்.

## ஹேமசிறி பெர்னான்டோ தொடர்பில் பெப்ரவரி 18 ஆம் திகதி தீர்ப்பு

கொழும்பு, ஜன. 21

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில், தகவல்கள் அறிந்தும் அது தொடர்பில், உரிய நடவடிக்கை எடுக்காமைக் குறித்து, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ எதிரான வழக்கில் இருந்து அவரை விடுதலைசெய்வதா இல்லையா என்பது தொடர்பில் பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி தீர்ப்பளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஜேர்மனியில் இலங்கைத் தூதுவர் சிறப்புரிமைகளைத் துஷ்பிரயோகம்!

ஜேர்மனியிலுள்ள இலங்கை தூதுவர் மனோரி உனம்புவே தனது இராஜதந்திர சிறப்புரிமைகளை துஷ்பிரயோகம் செய்கிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் ஜேர்மனியில் உள்ள இலங்கையர்களிடம் இருந்து வெளிவிவகார அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனச் செய்தி வெளியாகியுள்ளது.

அவரது விலையுயர்ந்த வீட்டுக்கு மாதம் 15 ஆயிரம் யூரோக்களும், வீட்டின் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இரண்டு தொழிலாளர்கள் மற்றும் தோட்டமுகாமையாளர் ஒருவருக்கு மாதம் 8 ஆயிரம் யூரோக்களும் செலுத்த வேண்டிய நிலைமை இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அவர் நியமிக்கப்பட்டு இரண்டு வருடங்களில் இலங்கைக்காக அவரால் எந்த வேலையும் செய்யப்படவில்லை, பல மாதங்களாக அவர் அலுவலகத்துக்கு வரவில்லை, அவருடைய அனைத்து வேலைகளும் அலுவலக ஊழியர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவரது இந்த பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக வெளிநாட்டு கடவுச்சீட்டுகள் தொடர்பில் ஊழல் மற்றும் மோசடி நடவடிக்கைகள் இடம்பெற ஆரம்பித்துள்ளன எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, அவரது சகோதரன் பேர்லினில் நடைபெற்ற வர்த்தக கண்காட்சியில் பல வர்த்தகர்களை ஏமாற்றியுள்ளார் எனவும், தூதுவரின் பெயரைப் பயன்படுத்தி பல்வேறு வர்த்தகர்களின் உதவியை நாடியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் சகோதரியின் பதவியை தவறாக பயன்படுத்திய சகோதரன் ஜேர்மனியில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்தார் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனின் தொழிலதிபர் ஒருவரால் பலமுறை முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து அவர் நாடு கடத்தப்பட்டார் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை, தற்போது தனது பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்க முயற்சித்து வரும் அவர், கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறையின் போது இலங்கையில் தங்குவதற்காக வெளிவிவகார அமைச்சில் 35 நாள்கள் விடுமுறையைப் பெற்றுள்ளார்.

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்



## எண்ணம் போல் வாழ்வு

"உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் – மற்று அது
தள்ளிலும் தள்ளாமை நீர்த்து

– என்ற திருக்குறளை அசைபோட்டுப் பார்க்கும் போது வள்ளுவரின் சூட்சுமமும் நமக்குப் புரிய வரும். ஏன் உள்ளுவது எல்லாம் உயர்வாய் இருக்க வேண்டும்? அது கிடைக்கா விட்டாலும் உயர்வாய் எண்ணுவதை விடக்கூடாது என்று அழுத்தமாகக் கூறக் காரணம் என்ன? சிந்தித்தோமானால் வள்ளுவர் மிகப் பெரிய மனோவியல் உண்மையை நம்மிடம் உரைக்கின்றார் என்பது புரியும்.

நாம் எண்ணும் எண்ணம் என்பது நூலில்லாத பட்டத்தை போன்றது. வானத்தில் அது பறந்து கொண்டிருக்கிறது என்பதை விட, மிதந்து கொண்டிருக்கிறது என்பதே சரி. வெறும் பட்டங்களாக அல்ல படங்களாக நாம் எண்ணும் எண்ணங்கள் ஒரு நொடிக்கு ஐந்து லட்சம் கிலோ மீற்றர் வேகத்தில் எதை நினைக்கிறோமோ அங்கு சென்றஉடனேநம்மிடம்திரும்புவதாகமனோவியலாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

வள்ளுவர் சொன்ன அந்த உயர் என்ற வார்த்தையைக் கவனியுங்கள். உயர்வாய் நினைப்பன உன்னை உயர்த்தும் என்ற வரி எவ்வளவு பெரிய உண்மையை உணர்த்துகிறது. வானத்தில் உயரே இருக்கிறது அந்த இரகசியம். நமது சகஸ்ராரத்தில் உயரே இருக்கிறது. உயர்வுள்ளல். கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர். அண்டத்தில் உள்ளதே பிண்டம். பிண்டத்தில் உள்ளதே அண்டம். அதனால் தான் சொல்கிறார்கள், எண்ணம் போல் வாழ்வு என்று. நாம் எதை விதைக்கிறோமோ அப்படியே அதை அறுவடை செய்கிறோம் என்று இயற்கையின் நியதி உரைக்கிறது. இதையே இயேசு பிரானும், எதை விதைத்தாயோ அதை அறுவடை செய்வாய் என்று அழகாகக் கூறுவார். அதனால்தான் வள்ளுவரும் உள்ளுவதெல்லாம் உயர் உள்ளல் என்று அழுத்தமாகக் கூறுகிறார். அந்த உயர் உள்ளல் நமது சகஸ்ராரத்தின் உயரே இருக்கிறது. உயர் என்ற சொல்லே நமக்கு உயர்வைக் கொண்டு வரும்.

எண்ணங்களை மாற்றினால் வாழ்க்கை மாறிவிடும் என்பார்கள். கண்ணுக்குத் தெரியாத விண்ணுலகத்தில் எண்ணமுடியாத விடயங்கள் பல கோடி நம்மைச் சுற்றிலும் உள்ள காற்று மண்டலத்தில். சக்திகள் அனைத்தும் இருக்கின்றன. நாம் எண்ணும் எண்ணங்களை மனம் உள்வாங்கி கிரகித்து மீண்டும் அதனைச் செயல்படுத்த ஆழ்மனத்திற்கு அனுப்பி வைக்கிறது. இவை எல்லாம் நொடிப் பொழுதில் நடக்கும் இறைவனின் அறியப்படாத இரகசியங்கள். நம் எண்ணமும் கண்ணாடியும் ஒன்றுதான். கண்ணாடி நம் பிம்பத்தைப் பிரதிபலிக்கிறது. அதேபோலத்தான் நம் எண்ணமும் வாழ்க்கையும். நம் எண்ணம் நன்றாக இருக்கும் போது வாழ்க்கையும் நன்றாகவே அமைகிறது. இதை நம்பி வாழ்வோர்க்கு அந்த நம்பிக்கையே பெருந்துணையாகிறது.

தீதும் நன்றும் பிறர்தரவாரா! துன்பம் வரும்போதெல்லாம் பிறரையோ அல்லது தன்னையோ நொந்துகொள்வதைத் தவிர்த்து, எங்கு, எப்போதோ செய்த வினையின் பலனை இப்போது அனுபவிக்குறோம் என்பதை யோசிக்க வேண்டும். அதை சரிசெய்ய முயலவேண்டும். முடியவில்லை எனில் அதன் போக்கில் அதை விட்டுவிட்டு தன்போக்கில் செல்லவும்;. காலம் எதையும் மாற்றக்கூடியது; எந்தப் பிரச்சினையையும் மாற்றவல்ல சக்தி கொண்டது.

கடந்த காலத்தில் வாழ்வது எந்தவித பயனும் அளிக்கப்போவதில்லை. அது நம்மிலும் மேலும் மேலும் எதிர்மறை எண்ணங்களைத்தான் தோற்றுவிக்கும். நம் எதிர்காலமும் அது போலவே அமையும். ஆகவே ஒரு மகிழ்வான எதிர்காலம் அமைய, நம்முடைய இன்றைய நிலை மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. இன்று நம் மனதில் முதன்மையாக நேர்மறை எண்ணங்களுடன் ஒரு மகிழ்வான மன நிலையில் வாழ்ந்தால், அதே போன்ற ஒரு எதிர்காலத்தை உருவாக்குகிறோம். எண்ணிய எண்ணியாங்கு எண்ணங்களே செயலைத் தீர்மானிக்கின்றன. எண்ணங்களுக்கு வலிமை உண்டு. அதனால் தான் எண்ணம் போல வாழ்வு என்றும், எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய் என்பதும் இந்த வாழ்வில் வலிமை வாய்ந்த வார்த்தைகளாகவே கூறப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த எண்ணங்களை நாம் எப்படி கையாளுகிறோம் என்பதிலேயே வாழ்வின் சூட்சுமம் அடங்கி உள்ளது. உள்ளத்தனையது உயர்வாக வேண்டுமெனில் உயர்ந்த எண்ணங்களை எண்ண வேண்டும்.

ஆடம்பரமாக வாழ்வதுதான் வாழ்க்கை என்ற வகையில் மக்களின் எண்ணங்கள் மாறி வருவதால் கொலை, கொள்ளை, வன்முறை அதிகரித்து வருகின்றன. மகாபாரதத்தில் கர்ணனின் இறப்பு தற்செயலாக நடந்தது அல்ல, மாறாக கர்ணன் ஏற்கனவே போட்ட எண்ணத்தின் விளைவுதான் அந்நிலைக்குக் காரணம் என அறியப்படுகிறது. ஆகவே இந்த மண்ணுலகில் யாராக இருந்தாலும் சரி எண்ணங்களே நம் வாழ்க்கையை அமைக்கின்றன. எண்ணத்தின் வலிமையே நம் வாழ்வின் தரம், உயர்வு எல்லாம் உலகை வெல்வதற்கு முன் தன்னை வெல்ல வேண்டும். என்று சொன்னதும் இதற்காகத்தான் தன்னை என்பது நாம் எண்ணும் எண்ணங்களே!.

உலகின் மிகச் சிறந்த வைரம் நம்மிடம் தோன்றும் எண்ணங்கலே. எங்கு பார்த்தாலும் மனித மனங்களில் ஏதேதோ எண்ணங்கள் பார்க்கும் மனித முகங்கள் எல்லாம் சிந்தனைவயப்பட்டன்வாகவே தோன்றுகின்றன. இறுக்கமான மனிதர்களாகவும், இயந்திர கதியான மனிதர்களாகவுமே தென்படுகின்றனர். எண்ணக் குவியல்களின் கலவைகளையும், சிந்தனை ரேகைகளையும் கொண்ட மக்கள் கூட்டத்தைக் காணும் திசையெல்லாம் பார்க்க முடிகிறது. சக மனிதனைக் கண்டு மகிழும் உள்ளமோ இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளுதலோ இல்லாமல் தனியொரு உலகில் மாறிவிட்டது. இதற்கெல்லாம் அடிப்படை யாதென்று சிந்தித்தால் அவரவர்க்கான தனிப்பட்ட எண்ணங்களே ஆகும். எண்ண ஓட்டங்கள் தவறாக இருக்கும் போது அங்கே வாழ்வியல் நெறிகளில் மாற்றம் ஏற்படுகிறது. மனித நடத்தை மாறுபாடுகளை மாற்றி அமைக்கும் வல்லமை எண்ணங்களுக்கே உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

- திருமதி.லிங்கேஸ்வரன் சுபேந்தினி -
(அபிவிருத்தி உத்தியோகத்தர்,பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.)

## சுப்த வஜ்ராசனம்

### (கணுக்கால்களின் மீது மல்லாந்து படுத்தல்)




**செய்(படி)முறைகள்:**

1.வஜ்ராசனத்தில் உட்காரவும். (முன்னர் இப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி)

2. மெதுவாக பின்பக்கமாக சரியவும், சரியும் போது உடலின் முழுப்பாரமும் (முழங்) கைகளினால் தாங்கட்டும். பின்னர் மல்லாந்து படுத்துக் கொள்ளவும். இரு கைகளையும் கூப்பியபடி தலைக்கு மேலாகவோ அல்லது நெஞ்சுபகுதியுடன் வைக்கவும். – உச்சநிலை இந்நிலையில் ஆழமாக ஒரு நிமிடம் வரை சுவாசிக்கலாம்.

3. பின்னர் கைகளை விடுவித்து இடக்காலையும் அதன் பின் வலக் காலையும் விடுவித்துக் கொண்டு ஆரம்ப நிலைக்கு வந்து ஓய் வெடுக்கவும்.

**பலன்கள்:** முதுகுத்தண்டு வலிமை பெறும். சுவாச நோய்கள் தீரும். வயிற்றுப்புற மற்றும் இடுப்பு புற பகுதிகளிலுள்ள உறுப்புக்கள் உரம் பெறுகின்றன. கால் நரம்புகள், தொடை தசைகள் மற்றும் தசை நார்கள் தளர்வடைந்து வலிமை பெறுகின்றன.

கணுக்கால்கள், முழங்கால்கள், முதுகுப்பகுதி என்பவற்றின் இயக்கத் தன்மை அதிகரிக்கும். மலச்சிக்கல், அஜீரணக் கோளாறுகள் குணமாகும். பாதம், கணுக்கால்கள், தொடைகள், எலும்புகள், இடுப்பு பகுதி என்பன பலம் பெறுகின்றன.

- ஸ்ரீ. நதிபரன் -
(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)

## நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை



தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன - தனதான

நீடுபுகழ் வீடுபெறு மாறுனரு ளேயருள
நீலமயி லேறிவரு - முருகோனே
நீசருறை மூபுரமும் வீசுகன லாலெரிய
நீளநகை வாருசிவ -குருநாதா
நாடுஅடை கேடதற பீடுநடை யோடுலவ
நாளுமரு ளேபொழியு - முருகோனே
நாதியதி லாதுலகு ஏதிலர தாகுநிலை
நாசமுற வேகருணை - புரியீசா
ஆடுமயி லேறுமுரு காசரவ ணாவெனநின்
றாதுரம தோடுனது - அடிபாடி
ஆசைவய மாகியுழ லாதுனடி யேயடைய
ஆறுபெய யோதிவரு - வரமீயாய்
நாடுபவர் கூறுதுய ரோடஅரு ளேபொழியு
நாதனென வேபுகழு - அருளாழி
ஞாலமது வேபுகழ கோலவிரு மாதரொடு
நாழுமருள் வாருநலை - பெருமானே!

– கவிஞர் இராசையா குகதாசன் –

காலைக்கதிர் Kalaikkathir

## நியாயமான தீர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கொழும்புக்கு வருகை தந்திருக்கும் பிரிட்டனின் தெற்காசிய மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கான அமைச்சர் தாரிக் அஹமட் பிரவுவிடம் நேரில் தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

இரா.சம்பந்தனும், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் நேற்று கொழும்பில் அவரைச் சந்தித்து விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

அப்போதே மேற்படி கருத்தை சம்பந்தன் வலியுறுத்திக் கூறினார்.

நடந்தசம்பவங்களுக்கானபொறுப்புக் கூறல், தற்போதைய மனித உரிமைகள் நிலைமை, அரசியல் தீர்வு ஆகிய மூன்று அம்சங்கள் குறித்தே சம்பந்தன் இந்தச் சந்திப்பில் அதிகம் வலியுறுத்தினார்.

இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களுடனான சந்திப்புகளில் தாமும் இந்த மூன்றையுமே வலியுறுத்தினார் என்றும் –

அவற்றை ஆக்கபூர்வாக அணுகுவதற்குத் தாங்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று அவர்கள் கூறியமையைத் தாம் வரவேற்றார் என்றும் –

கொழும்புக்கு வருகை தந்த பிரிட்டிஷ் அமைச்சர் தாரிக் அஹமட் பிரபு சம்பந்தனிடம் தெரிவித்தார்.

இந்த விடயங்களில் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற கொழும்பின் வாக்குறுதி சொல்லிலும், செயலிலும் ஒரே மாதிரியாக நடைமுறைப்படுத்தப்படுவதைத் தாங்கள் பார்த்திருக்கின்றார்கள் என்று தாம் இலங்கைத் தலைவர்களிடம் கூறினார் எனவும் அமைச்சர் தாரிக் அஹமட் பிரபு, சம்பந்தன் – சுமந்திரன் குழுவிடம் குறிப்பிட்டார்.

கொழும்பு – 07 இல் உள்ள பிரிட்டிஷ் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது இலங்கைக்கான பிரட்டிஷ் தூதுவர் சாரா ஹுல்டன் அம்மையாரும் பங்குபற்றினார்.

---

## மக்களின் காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு செல்லும் கட்டுவன் – மயிலிட்டி வீதி விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக காணப்பட்டிருந்தது.

தற்போது உள்ளூராட்சி மன்றத்துக்கோ, பிரதேச செயலகத்திற்கோ எந்த வித அறிவிப்பையும் செய்யாமல் திடீரென வீதி அபிவிருத்தி அதிகார சபை, இராணுவத்தினரின் உதவியுடன் அத்துமீறி மக்களுடைய காணி ஊடாக வீதியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவத்தினர் தனியார் காணி ஊடாக வீதியை புனரமைப்பதனால் 9 பொதுமக்களினுடைய ஏறத்தாழ 4 ஏக்கர் வரையான விவசாய நிலப்பகுதி துண்டாடப்படுகிறது.

வலி.வடக்கில் 3,000 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் 7,000 மக்கள் மீளக்குடியமர வேண்டியிருக்கின்றது. இது ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்திற்கு மாறான செயற்பாடாகவே காணப்படுகின்றது.

இன்றைய வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் மக்களுடைய முறைப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோது இந்த வீதி புனரமைப்பு உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன் பொதுமக்களின் காணிகளை எந்த காலத்திலும் துண்டாட இடமளிக்க முடியாது

நேற்று ஊடகங்கள் வாயிலாக அங்கஜன் இராமநாதன் எம்.பி. தங்களுடைய முயற்சியால் இந்த வீதி விடுவிக்கப்படுவதாக ஒரு கருத்தை தெரிவித்திருந்தார். இது பொய்யான செய்தி. தனியார் காணிகள் ஊடாக அத்துமீறி பாதையை ஏற்படுத்த முடியாது. உண்மையான வீதியூடாக அதனை செய்ய வேண்டும். மக்கள் காணியூடாக வீதி அமைத்துவிட்டு வீதியைத் திறந்து விட்டேன் எனப் பொய்யான பரப்புரை செய்து மக்களை ஏமாற்றுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. உடனடியாக அதை நிறுத்துவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் என்ற ரீதியில் அங்கஜன் இராமநாதன் நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

அதேவேளை இதில் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் –

எமது ஒப்புதலின்றி சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளாமல் அரசும் அரச படையினரும் பலாத்காரமாக எமது காணியை கைப்பற்றியுள்ளனர்.

இந்நடவடிக்கைக்கு எதிராக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இதனுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம். – என்றார்.

---

## சர்ச்சைக்குரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு தரப்பினரும் முயற்சிகளை முன்னெடுத்து வந்திருந்தனர்.

அந்நிலையில் கடந்த டிசம்பர் மாதம் 7ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு ஆலோசனை கூட்டத்தில் , குறித்த வீதி விடுவிப்பு விடயம் தொடர்பில் ஆராயுமாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாக்கு ஜனாதிபதி உத்தரவிட்டு இருந்தார்.

அதனை அடுத்து அந்த வீதியினை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறி , தனியார் காணிகளை ஆக்கிரமித்து, அதனூடாக வீதி அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

அது தொடர்பில் அரசியல்வாதிகள் பலரும் கருத்து தெரிவித்து உள்ளனர்.

### அங்கஜன் கருத்து

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன்னர் இருந்த வீதியை போல தற்போது முழுமையாக விடுவிப்பதற்கு இன்னும் 25 மீற்றர் பின்நகர்த்தவேண்டும் என ஒருசிலர் கூறுகின்றனர்.

''ஆனால் தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டால் தற்போதைய நிலையில் இதற்கு சாத்தியமில்லாத தன்மையே அங்கு காணப்படுகின்றது.

“அதாவது, கட்டுவன் – மயிலிட்டி வீதியின் 400 மீற்றர் சர்ச்சைக்குள்ள பகுதியின் கிழக்கு புறமாக இராணுவ உயர் பாதுகாப்பு வலய முட்கம்பி வேலி உள்ளது.

“அதற்கு பின்புறமாக விமானப்படையின் முட்கம்பி வேலி உள்ளது. அதற்கு பின்னால் விமான நிலையத்தின் சுற்று மண் அணை உள்ளது. இவ்வாறான நிலையில் 25 மீற்றர் தூரத்துக்கு வேலியை பின்நகர்த்துவதாயின் விமான நிலைய மண் அணை உள்ள பகுதியிலேயே வேலி நகர்த்த வேண்டும்.

“தேசிய பாதுகாப்பு தொடர்பான கரிசனையின் அடிப்படையில் இவ்விடயம் சாத்தியப்படாதநிலையில், தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் 6 மீற்றர் வரை பாதுகாப்பு வேலியை பின் நகர்த்த முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.” – என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது உத்தியோகபூர்வ முகநூலில் பதிவிட்டுள்ளார்.

அந்நிலையில் விடுவிக்கப்படுவதாக கூறப்படும் 400 மீற்றர் நீளமான வீதி தொடர்பில் சர்ச்சைகள் கிளம்பியுள்ளத். குறித்த பகுதியில் வீதி அமைக்கும் நடவடிக்கைகளுக்கான செப்பனிடல் பணிகளை இராணுவத்தினரின் பொறியியல் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த பகுதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ள நிலையில் அப்பகுதிக்கு செல்வோரை இராணுவத்தினர், இராணுவ புலனாய்வு பிரிவினர் விசாரணை செய்கின்றனர்.

அத்துடன் புலனாய்வு பிரிவினர் அங்கு செல்வோரின் வாகன இலக்கங்கள் , உள்ளிட்டவற்றை பதிவு செய்தும் வருகின்றனர்.

அதேவேளை, வீதி செப்பனிடல் பணிகள் உள்ளிட்டவை தொடர்பான செய்தி சேகரிக்கச் செல்லும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்டவர்களும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

---

### பொரளை தேவாலய கைக்குண்டு விவகாரம்;

# வைத்தியருக்கு குண்டு வழங்கிய நபரும் கைது

பொரளை தேவாலயத்தில் இருந்து கைக்குண்டு மீட்கப்பட்டமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட ஓய்வுபெற்ற வைத்தியருக்கு குறித்த குண்டை வழங்கினார் எனக் கூறப்படும் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை – ரன்ன பகுதியில் வைத்து குறித்த சந்தேகநபர் கொழும்பு குற்றவியல் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலைக்கு அருகில் பொரளை ஆனந்த ராஜகருணா மாவத்தையில் அமைந்துள்ள சகல பரிசுத் தவான் தேவாலயத்தில் கைவிடப்பட்ட நிலையில் கடந்த 11ஆம் திகதி கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த கைக்குண்டை வைத்தார் என நம்பப்படும் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்துக்கு அமைய பிலியந்தலையில் வைத்து கடந்த 17ஆம் திகதி குறித்த ஓய்வுபெற்ற வைத்தியர் கொழும்பு குற்றவியல் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்நிலையில், தற்போது வரை குறித்தகைக்குண்டுவிவகாரம்தொடர்பில் மொத்தமாக 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

---

## ஏழு பேரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் ஒருவர் ஒருதலைக் காதலாக காதலித்து வந்துள்ளார் எனவும், அப்பெண்ணுக்கு விருப்பமில்லாத நிலையில் அவரை இளைஞன் பின் தொடர்ந்து தொந்தரவு கொடுத்து வந்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது. இது தொடர்பில் பெண்ணின் உறவினருக்கும் அந்த இளைஞனுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில் கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அந்த இளைஞர் அவரது குழுவினருடன் பெண்ணின் உறவினர் மீது மேற்கொண்ட வாள்வெட்டு தாக்குதல் சம்பவத்தில் பெண் ஒருவர் உட்பட 7 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் அங்கிருந்து தப்பி ஓடி தலைமறைவாகி இருந்தனர். அவர்களில் 7 பேரை நேற்று முன்தினம் முன் புதன்கிழமை இரவு பொலிஸார் கைது செய்தமையுடன் அவர்கண்டமிருந்து வாள் மற்றும் கத்திகளை மீட்டுள்ளனர்.

---

## ஹிஜாஸ் ஹிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹிஸ்புல்லாவின் பிணை மனுக் கோரிக்கையை மேல் நீதிமன்றம் நிகராகரித்தமையை ஆட்சேபித்து, அவரது சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு நேற்று மேன்முறையீட்டு மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அரசுத் தரப்பு இந்த உறுதிமொழியை வழங்கியது.

புத்தளம் மேல் நீதிமன்றத்தில் வரும் 28ஆம் திகதி அவருக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு வருகின்றது. அந்த விசாரணையின் முடிவில் அவருக்குப் பிணை வழங்கக் கோரி விண்ணப்பிக் கப்படுமானால் தாங்கள் அதனை ஆட்சேபிக்க மாட்டார்கள் என அரசுத் தரப்பு நேற்று நீதிமன்றத்தில் கூறியது.

அந்த உறுதிப்பாட்டை ஹிஜாஸின் சட்டத்தரணிகள் ஏற்றுக் கொண்டனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா, சட்டத்தரணிகள் சானக்க கூரே, நிரான் அங்கிட்டல் ஆகியோர் சட்டத்தரணி சனத் விஜேவர்த்தனாவின் அனுசரணையுடன் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்காக நீதிமன்றில் முன்னிலையாகினர்.

---

## யாழ்.சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ள நிலையில் சர்வதேச வர்த்தக மன்றம், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் யாழ்ப் பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் ஆகியன அனுசரணை வழங்கியுள்ளன.

அனைத்துப் பொதுமக்களையும் கண்காட்சியில் இணைந்துக்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளமையுடன் மேலும் தகவல் விவரங்களுக்கு www.jitf.lk ஐப் பார்வையிடவும் அல்லது 0771093792 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளாம்.

---

## பந்துல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் மேற்கொண்டுள்ளார்.

பாகிஸ்தான் வர்த்தக அமைச்சர் அப்துல் ரசாகின் அழைப்பின் பேரில் அமைச்சர் பாகிஸ்தான் பயணமாகியுள்ளார்.

இதன்போது அவர் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அந்நாட்டின் வர்த்தக சங்கங்களுடன் கலந்துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## பிரிட்டனிலுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வகையில் பிரிட்டனில் வசிக்கின்ற புலம்பெயர் இலங்கையர்களுடன் இணைந்து செயற்பட விரும்புகின்றோம்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதற்காகப் புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாடச் சந்தர்ப்பம் வழங்குமாறும் பிரிட்டன் அமைச்சர் லோர்ட் தாரிக் அஹமட்டிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டனின் தெற்காசியா மற்றும் பொதுநலவாய அமைப்புக்கான அமைச்சர் லோர்ட் தாரிக் அஹமட், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று சந்தித்துக்கலந்துரையாடினார். இதன்போதே ஜனாதிபதி இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இலங்கையின் நெருங்கிய மற்றும் நடைமுறை நண்பராக ஒத்துழைக்க, ஐக்கிய இராச்சியம் எப்போதும் தயாராக இருப்பதாகவும் பிரிட்டன் அமைச்சர் கூறினார்.

ஐக்கிய இராச்சியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு 2023இல் 75 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. இதற்காக ஒரு விழாவை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதில், இரு நாடுகளின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கலை, கலாசார நிகழ்வுகள் மற்றும் இரு நாட்டு மக்களுக்கிடையிலான தொடர்புகளை மேம்படுத்தும் வகையிலான நிகழ்வுகளை நடத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன், முதன்மைச் செயலாளர் மேத்யூ டெய்த், லோர்ட் தாரிக் அஹமட்டின் உதவியாளர் இசபெல் ஸ்கொட், வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


அதியுயர் ஜப்பான் தொழிநுட்பத்துடன்
நுண்ணுயிர்களை கொல்லக்கூடிய ஒரே பெயின்ட்
நிப்போனிடமிருந்து மட்டுமே..!
NIPPON
HEALTH CARE SOLUTIONS
NIPPON PAINT
MEDIFRESH 3in1
With SILVER ZINC ION
Innovative Japanese Technology
சுற்றுச் சூழலுக்கு உகந்த பெயின்ட்
நீண்ட காலம் உழைக்கும்
அற்புதமான மறைக்கும் சக்தி
சிறந்த பூஞ்சைக் காப்பான்
விரைவாகக் காயும்
கறை, கொப்புளங்கள், உரிதல் என்பவற்றிலிருந்து பாதுகாப்பு
பயன்படுத்தச் சுலபமானது
லீட் அல்லது மெர்குரி சேர்க்கத் தேவையில்லை
Cover hariline cracks
WATER PROOF
Water Proof
Washable
99%
Effective against Bacteria
www. nipponpaint.lk
மெடிபிரஷ் 3 இன் 1
நிப்போன் தீய நுண்ணுயிர்களுக்கு எதிரான மெடிபிரஷ் பெயின்டானது தண்ணீரை ஊடுபுக விடாதது, கழுவக் கூடியது, நூலிழை வெடிப்புக்களை மறைக்கக் கூடியது. ஆரோக்கியத்தையும் சிறந்த சுகா தாரத்தையும் தரக்கூடிய வகையில் நீண்டு நிலைக்கக் கூடியது. சில்வர் அயன் மற்றும் சிங் அயன் ஆகிய சிறப்புக் கலவைகள் கொண்டு தயாரிக்கப்பட்டது. இந்தக் கலவை ஜப்பானின் உணவு ஆராய்ச்சி ஆய்வு கூடத்தில் பரிசோதித்து உறுதிப்படுத்தப்பட்டது.
ஈகோலி, எம்ஆர்எஸ்ஏ. ஸ்டேஃபிளோகோகஸ் ஆரியஸ் போன்ற ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய தீய நுண்ணுயிரக ளின் வளர்ச்சியை, பெருக்கத்தைத் தடுக்கிறது. அதன் மூலம் நீங்கள் வாழும் சூழலைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்கிறது. அதனால் இந்தப் பெயின்ட் வீடுகள், வைத்தியசாலைகள், உணவுப் பாதுகாப்புப் பகுதிகள் ஆகியவற்றுக்கு மிகப் பொருத்தமானது.
Environmentally Friendly Paint
GREEN CHOICE
ISO
NIPPON PAINT LANKA (PVT) LTD
No.69A, Buthgamuwa Road,Rajagiriya,Sri Lanka.
Telephone : +94 114 600400 Fax : +94 114 600409
www.nipponpaint.lk
A product of ISO 9001 : 2015 certified company

# 50 கோடி டொலர் யாருக்குச் செலுத்தப்பட்டது? மத்திய வங்கி ஆளுநர் வெளிப்படுத்தவேண்டும்!

## எரான் விக்ரமரத்ன வலியுறுத்து

பால்மா, எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுடன் எரிபொருள் இல்லாததன் காரணமாக மின்விநியோகம் தடைப்படலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், ஒப்பீட்டளவில் மிகவும் சொற்பளவான இலாபத்தைத் தரக்கூடிய பிணைமுறிகளுக்கான கொடுப்பனவாக 50 கோடி டொலர்களை அரசாங்கம் செலுத்தியிருக்கின்றது.

இதனூடாகக் கறுப்புப்பணத்தை சட்டபூர்வ பணமாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆகவே, இந்தக் கொடுப்பனவு யாருக்குச் செலுத்தப்பட்டது என்பது தொடர்பாக மத்திய வங்கியின் ஆளுநர் தெளிவுபடுத்தவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்கவுரையைச் செவிமடுத்தபோது, புதிதாகக் பதவியேற்ற ஜனாதிபதியொருவர் தமது கொள்கைகள் தொடர்பில் விளக்கமளிக்கின்றார் என்றே கருதத்தோன்றியது.

ஆனால் தான் ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன என்பதை அவர் நினைவில்கொள்ளவேண்டும்.

அதன்படி அவரது கொள்கை விளக்கவுரையில் நாட்டில் தற்போது காணப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பாக எதுவும் கூறப்படவில்லை. அதேபோன்று தற்போதைய நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான எதிர்காலச் செயற்திட்டங்கள் தொடர்பிலும் எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

தற்போது எமது நாடு இரு முக்கிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றது. அவற்றில் முதலாவது பொருள்களின் சடுதியான விலையேற்றமாகும். அண்மைய காலங்களில் மரக்கறிகள் உள்ளடங்கலாக அனைத்து அத்தியாவசியப் பொருள்களினதும் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளன.

ஒருபுறம் விலைகள் அதிகரித்தாலும் மறுபுறம் சந்தையில் அத்தியாவசியப் பொருளகளுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை ஜனாதிபதி அவரது கொள்கை விளக்கவுரையில் முன்வைக்கவில்லை. அதேபோன்று இரண்டாவதாக நாட்டில் டொலருக்கான பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது.

எரிபொருள் உள்ளடங்கலாக அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குத் தம்மிடம் டொலர் இல்லை என்று அரசாங்கம் கூறுகின்றது. பால்மா, எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுடன் எரிபொருள் இல்லாததன் காரணமாக மின்விநியோகம் தடைப்படலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், ஒப்பீட்டளவில் மிகவும் சொற்பளவான இலாபத்தைத் தரக்கூடிய பிணைமுறிகளுக்கான கொடுப்பனவாக 50 கோடி டொலர்களை அரசாங்கம் செலுத்தியிருக்கின்றது.

ஆகவே, இந்தக் கொடுப்பனவு யாருக்குச் செலுத்தப்பட்டிருக்கின்றது என்ற நியாயமான கேள்வி எமக்கு எழுந்துள்ளது. ஏற்கனவே பெருமளவில் கொள்ளையடிக்கப்பட்ட கறுப்புப் பணத்தை இதனூடாக சட்டபூர்வ பணமாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படக்கூடும் என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. நாம் ஆளுந்தரப்பில் இருந்திருந்தால் கடன்வழங்குநர்களுடன் பேச்சு நடத்தி, கடன்களை மீளச் செலுத்துவதற்கு மேலும் கால அவகாசத்தைப் பெற்றிருப்போம்.

இலங்கை மின்சாரசபைக்கு அவசியமான எரிபொருளை விநியோகிக்குமாறு மின்சக்தி அமைச்சால் விடுக்கப்பட்ட கோரிக்கையை இலங்கை இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனம் நிராகரித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால், பரஸ்பர பரிமாற்றல் வசதி அடிப்படையில் இந்தியாவிடமிருந்து நிதியுதவியைப் பெறுவதாகவும் அதனை அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தமுடியும் என்றும் அரசாங்கம் கூறியது.

அதேபோன்று ஏற்கனவே இந்தியாவிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த எண்ணெய்த் தாங்கிகளைத் தாம் மீளப்பெற்றுக்கொண்டதாக அரசாங்கம் நாடகமொன்றை அரங்கேற்றுகின்றது. ஆனால், அதில் எவ்வித உண்மையுமில்லை.

எனவே, வலுவானதோர் இடத்திலிருந்துகொண்டு வெளிநாடுகளுடன் பேச்சுகளை முன்னெடுக்காததன் விளைவாக எமது நாடு எதிர்வருங்காலங்களில் மிகமோசமான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும்.

மேலும் தனது ஆட்சிக்காலத்தில் எந்தவொரு மனித உரிமை மீறல் செயற்பாடுகள் இடம்பெறுவதற்கும் தான் இடமளிக்கவில்லை என்று ஜனாதிபதி அவரது கொள்ளை விளக்கவுரையில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவரது ஆட்சியின் கீழேயே பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி எமது கட்சியின் உறுப்பினரான ரிஷாத் பதியுதீன் 9 மாதங்கள் வரையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

அதேபோன்று சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றார். நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் பொதுமக்களினதும் மனித உரிமைகளை அரசாங்கம் எவ்வாறு கையாள்கின்றது என்பதற்கு இதேபோன்று மேலும் பல உதாரணங்கள் காணப்படுகின்றன.

ஆகவே, உண்மையில் அரசாங்கம் மனித உரிமைகளைப் பாதுகாக்கின்றதா? இல்லை? என்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் பொதுமக்களுமே கூறவேண்டும். - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.01.2022இல் வெளியிடப்பெற்றது.

# கல்வியில் மாணவர்கள் சாதனை படைக்க சுய ஒழுங்குமுறைக்கற்றலின் செல்வாக்கு!



சர்வதேச கல்விப்புலத்தில் அண்மைக் கால மாக கல்வியில் மாணவர்கள் சாதனைகள் படைக்க பல்வேறு ஆய்வுகள் வெளிவந்த வண் ணமுள்ளன. அந்த வகையில் சுய ஒழுங்குபடுத்தப் பட்ட கற்றல் இன்று பிரசித்தி பெற்றுள்ளது. மாண வர்களுடைய பொதுப்பரீட்சைகள் உட்பட அடைவு மட்ட வெற்றிகளைத் தீர்மானிப்பதில் இச்சுய ஒழுங்கு படுத்தப்பட்ட கற்றல் தீர்க்கமான ஒரு காரணியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மாணவர்களிடம் ஏற்படுத்தப்படும் கற்றல் தொடர் பான சிந்தனைகள் ஊக்கம் மனவெழுச்சிகள் கற்ற லுக்கான உத்திகளைத் தெரிவு செய்து நீடித்திருத்தல், சுய வினைத்திறன் என்பவற்றை உள்ளடக்கிய சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலை மேம்படுத்துவதன் ஊடாக அவர்களின் கல்வி அடைவை வெகுவாக மேம் படுத்த முடியும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் மாணவர்களிடத்தில் அக ரீதியான தூண்டலை ஏற்படுத்தி, கற்றலுக்குத் தடை யாகவுள்ள புறக்காரணிகளையும் வெற்றிகொள்ள வழிகாட்டுவிக்கின்றது. இந்தக் கற்றல் செயன்முறை பண்டுரா என்ற அறிஞரின் சமூகக் கற்றல் கொள்கையி லிருந்து தற்போது விருத்தியடைந்துள்ளது.

எமது நாட்டில் பரீட்சை மைய பாட உள்ளடக்கத்துக் குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம், கற்றல் எவ் வாறு நிகழ்கின்றது. கற்றல் தொடர்பான ஊக்கம், மாணவரது மனவெழுச்சிகள், கற்றல் திறனை மேம் படுத்தல், தொடர்பான விடயங்களுக்கு முக்கியம் கொடுப்பதில்லை. இவையே கற்பதற்குக் கற்றலுக்கான தேர்ச்சிகளாகும். வெளிநாட்டுக் கல்வி முறைகளில் இவற்றுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இனி நாமும் இவற்றைப் பிரயோகிப்போம். சுய ஒழுங்குமுறை அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் மாணவர்களின் ஞாபகம், கவனம், புலக்காட்சியினூ டாகக் கற்றல் செயன்முறையில் தமது எண்ணங்கள், நடத்தைகள் மனவெழுச்சிகளை முகாமை செய்து வெற்றிகரமாகக் கற்றல் அனுபவங்களை ஒழுங்கு படுத்துதலே சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலாகும். இதில் சுய கட்டுப்பாடும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

இந்தச் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலுக்கான உத்திகளாகத் திட்டமிடல், கண்காணித்தல், கட்டுப்படுத் தல், சுயபிரதிபலிப்பு என்பனவாகும். இவை ஏற்கனவே யுள்ள அறிவை புதிய சந்தர்ப்பத்துடன் இணைத்து பொருத்தமுடையதாக்கும். திட்டமிடலானது எப்போது கற்றலை ஆரம்பிப்பது? எங்கே கற்பது? எவ்வாறு கற் பது? எதைக்கற்பது? என்பனவற்றைக் கொண்டிக்கும்.

கண்காணித்தல், என்பது நான் செய்ய எதிர்பார்த் ததைச்செய்தேனா? எனது கவனத்தை மாற்ற முடியுமா? நான் விளங்கிக் கொள்ள வேண்டியதை விளங்கிக் கொள்கின்றேனா? நான் பொருத்தமாகச் சிந்திக்கின் றேனா? ஆகிய விடயங்களாகக் காணப்படும். கட்டுப்பா டானது நான் கற்றலை எவ்வாறு வித்தியாசமாகக் கற் பது? கற்றலில் ஓர் ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக் கின்றேனா? எனக்கு நானே எவ்வாறு ஊக்கமளிப்பது? சிறப்பாகக் கற்க என்ன செய்யலாம்? என்ற விடயங்கள் அடங்குகின்றன.

சுய பிரதிபலித்தலானது, நான் செய்ய எதிர்பார்ப் பவை எல்லாவற்றையும் நிறைவேற்ற முடிகின்றதா?



மேலும் சாதனையைப் பெறக் கற்க முடியுமா? அடுத்த முறை நான் வித்தியாசமாக என்ன செய்யலாம்? நான் விட்ட தவறுகள் எவை? எனது பலம், பலவீனங்கள் என்ன? என்ற இந்தக் காரணிகளுடன் கல்வி இலக் கைத் தீர்மாணித்தல், சூழலைக்கட்டுப்படுத்தல், நேர முகாமைத்துவம், உதவி தேடல், சுய கட்டுப்பாடு, சுய ஊக்கல், கவனத்தைக் கட்டுப்படுத்தல், சுய கணிப்பு, ஞாபகம் என்பவையும் முக்கியமானவையாகவுள்ளன.

சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலை மேற்கொள் ளும் மாணவர்களின் இயல்புகள்,

1. கற்றல் தொடர்பான தகவல்களை ஒழுங்குபடுத்த, உருமாற்ற, விரிவுபடுத்த, புதுப்பிக்கத் தெரிந்தவர்கள்.

2. தமது உள்ளத்தின் செயன்முறைகளைக் கற்ற லுக்காகத் திட்டமிட்டு, கட்டுப்படுத்தி, வழிப்படுத்தி எவ் வாறு கற்றல் இலக்குகளை அடைய முடியும் எனத் தெரிந்தவர்கள்.

3. தமது கற்றல் தொடர்பான இலக்குகளைக் கண் காணிப்பவராக, தாமாகவே ஊக்கப்படுத்துபவராக மனித - பௌதீகவளங்களை முகாமை செய்பவராக கற்றல் தொடர்பான முடிவுகளைச் சரியாக எடுப்பவராக இருப்பார்.

4. எவ்வாறு கற்க வேண்டும் என்பதைத் தெரிந்த வராக, ஊக்கல் சார்ந்த விருத்தி செய்பவராக, உயர் கற்றல் வினைத்திறனுடையவராக தனது சுய சிந்த னையைக் கண்காணித்து பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனுடையவர்கள், தமது பலங்களையும், பலவீனங்க ளையும் அடையாளம் கானும் ஆற்றல் உள்ளவர்களாக இருப்பார்.

5. நேரத்தைத் திட்டமிட்டுக் கட்டுப்படுத்துவதுடன், கற்றல் சூழலை எவ்வாறு உருவாக்கிக் கட்டமைப்பது என்பதைத் தெரிந்தவர்கள் அத்தோடு பொருத்தமான இடத்தைக் கற்றலுக்காகக் கண்டறிந்து ஆசிரியர்கள், சக மாணவர்களின் தேவையான உதவிகளை நாடக் கூடியவர்கள், சுதந்திரமாகக் கற்கக் கூடியவர்கள்.

6. கற்றல் உத்திகளைச் சிறப்பாகப் பயன்படுத்து வதோடு உள்ளக வெளிவாரியான கவனச் சிதறல்க ளைத் தவிர்த்து, தமது கவனத்தைக் கற்றலின் பால் ஒருமுகப்படுத்தக்கூடியவர்கள்.

இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட மாணவர்கள் கற்றலில் சாதனையைப் படைப்பார்கள், இவ்வாறு மாணவர்களுக்கும் உரிய பயிற்சியை வழங்கி சாதனை மட்டத்தையடையச் செய்யலாம்.

இதற்கு சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் செல் வாக்கு செலுத்தும் காரணிகளைப் புரிந்திருக்க வேண்டும். இதில் ஊக்கல், உயர் அறிக்கைசார் திறன்கள், கற்றல் உத்திகள் சூழல், என்பனவும் உள்ளன. ஊக்கல் சார்ந்த காரணிகளில் சுயவிரிவாக்கம், உள ஆற்றுப் படுத்தல், வெற்றிக்கான எதிர்பார்ப்பு சுயதிட்டமிடல், கற்றல் அடைவுகளில் ஆர்வம் என்பன உள்ளடங்குகின்றன.

உயர் அறிக்கை சார் திறன் காரணங்களாகத் திட்ட மிடல், சுயமதிப்பீடு, சுய கண்காணிப்பு, சுய கற்பித்தல் என்பன உள்ளடங்குகின்றன. கற்றல் உத்தி சார்ந்த காரணிகளாகப் பிரச்சினை தீர்க்கும் நுட்பம், சிந்த னையைத் தயார் செய்தல், சூழ்நிலைகளைப்புரிந்து கொண்டு சாதகமாக்கல், ஞாபகம், நேரமுகாமை சுய கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பவை அடங்குகின்றன.

இவற்றோடு மிக முக்கியமாக ஆசிரியரின் முன் மாதிரி மாணவர்கள் ஆசிரியருடனான உயிர்த்துடிப் பான தொடர் பாடல் இடைவினை, பாடத்திட்டமிடல், கற்பித்தல் நுட்பம் மாணவர்களுக்குப் பொருத்தமான பின்னூட்டல்களை வழங்குதல், மாணவர்களை ஊக் கப்படுத்தல் என்ற வகையில் மாணவர்களின் சுய ஊக்கப்படுத்தலில் ஆசிரியர் ஆக்கபூர்வமான தாக்கத் தைச் செலுத்துகின்றார்கள்.

அத்தோடு கற்றலுக்கான நிகழ்ச்சிகள் கவர்ச்சியான சூழல், பொருத்தமான உபகரணங்கள், மாணவர்கள் கற்றலை இலகுபடுத்துகின்றன. ஊக்கப்படுத்தல், சுய வினைத்திறன் உயர்வான மனப்பாங்கு, தன்னம் பிக்கை மத நம்பிக்கை, மென்திறன்கள் மாணவர்களி டம் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் விருத்தியடைய உதவும் காரணகளாகவுள்ளன. இதற்கு எதிரான காரணிகளாக, கவனமின்மை, மன அழுத்தம், அவ நம்பிக்கை, ஊக்கமின்மை, அக்கறையின்மை, ஈடுபா டின்மை என்பனவாகும்.

இவற்றுடன் பெற்றோர்களுடைய பொருத்தமான மனப்பாங்கு மற்றும் ஒத்துழைப்பு மாணவர்களின் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலை மேம்படுத்தும் முக்கிய காரணியாகவுள்ளன.

இம் முக்கியமான சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலை மாணவரிடத்தே விரிவடையச் செய்ய ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் முக்கியமான வையாகவுள்ளன.

**சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் ஆசிரியரின் வகிபாகம்:**

1. மாணவர்களின் பலங்களையும் பலவீனங்க ளையும் இனம் கண்டு சுய மதிப்பீட்டு உத்திகளைப் பயன்படுத்த வழிகாட்டல்.

2. சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் தொடர்பான தேர்ச்சிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

3. ஆசிரியர்கள் கற்றல் - கற்பித்தல் தொடர்பாகத் தமது அறிவைப் புதுப்பித்துக் கொண்டிருக்க வேண்டும்.

4. சுய மதிப்பீட்டின் கூறுகளை மாணவர்கள் அறிய



ஊக்கமளிக்க வேண்டும்.

5. சுதந்திரமான ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலைப் பயன்படுத்த மாணவர்களுக்கு வழிகாட்டல் சுயாதீன மாக அவர்கள் இயங்கிக் கற்க பயிற்சிகளை வழங்குதல்.

6. மாணவர்களின் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்ற லுக்குப் பெற்றோர்கள், சமூக ஒத்துழைப்பையும் பின் னூட்டலையும் பெறச் செயற்படல்.

7. பிரதிபலித்தல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடல்

மேற்கூறப்பட்டபடி இன்றைய ஒவ்வொரு ஆசிரி யரும் தமது சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் திறனை வளர்ப்பதோடு, இலக்குகளைத் தயாரித்தல், திட்டமிடல், சுய ஊக்கல், சுய கண்காணிப்பு, சுயகட்டுப்பாடு, கவ னத்தைக் கட்டுப்படுத்தல், நெகிழ்வுத் தன்மை, சுய விரிவாக்கம், சுய கற்பித்தல், பிரச்சினை தீர்க்கும் நுட்பம், சூழலைக் கட்டுப்படுத்தல், நேரமுகாமை, தனியாள் பொறுப்புக்கூறல், சுய அவதானிப்பு போன்று சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் - கற்பித்தல் உத்தி களைப் பயன்படுத்தல், பயிற்சி அளித்தல் தேர்ச்சி ஆசிரியருக்கு அவசியமாகவுள்ளது. மேலும் மாண வர்களின் கற்றல் தொடர்பான ஊக்கலை முகாமை செய்வதற்காக பொருத்தமான உத்திகளை ஆசிரியர் பிரயோகிக்க வேண்டும்.

இவ்வகையில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் திறனுள்ள மாணவர்களிடம் சிறந்த கற்றல் அடைவை ஏற்படுத்துகின்றது என பல ஆய்வு முடிவுகள் தெரிவிக் கின்றன. மேலும் ஐந்து வயதிலிருந்தே மாணவர்களி டம் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலுக்கான ஆயத்தம் ஆரம்பமாகின்றது. ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வியில் இந்தக் கற்றலுக்கான முறையான தேர்ச்சி களையும் பயில்வுகளையும் மாணவர்களுக்கு வழங் குதல் இன்றைய காலத்துக்குத் தேவையாகவுள்ளது.

அறிவைக் கட்டுமானம் செய்து ஞாபகத்தில் நிறுத் திக்கொள்ள அறிகைசார் உத்திகளையும், சுய ஊக்கு விப்பு மூலம் தனது விவேகத்தின் பயன்பாடுகளையும், திட்டமிடல், கண்காணித்தல் போன்ற உயர் அறிவுசார் தேர்ச்சிகளையும் இலாவகமாகப் பயன்படுத்தக்கூடிய ஆற்றல் சுய ஒழுங்குமுறைக் கற்றலில் ஈடுபடும் பிள்ளையிடம் காணப்படும் விசேட இயல்பாக உள்ளது. எனவே எமது பாடசாலை அதிபர், ஆசிரியர் கல்வியிய லாலர்கள் சுய ஒழுங்குமுறைக் கற்றலை மாணவர் களிடையே ஊக்குவித்து கல்வித்துறையில் சிறந்த பெறுபேறுகளுக்கு வழி செய்யலாம். இந்த விடயம் தொடர்பாகப் பெற்றோர்களுக்கும் பொருத்தமான விழிப்புணர்வுகளையும் விரைவாக ஏற்படுத்த வேண் டியுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir





# வவுனியாவில் பாரிய சத்தத்துடன் தீப்பற்றி எரிந்தது மதுபானசாலை!

## கடும் போராட்டத்தின் பின் தீ அணைப்பு

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் மது விருந்தகத்தில் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை மூன்று மணியளவில் திடீரென தீப்பற்றி எரிந்த நிலையில் தீயணைப்பு பிரிவினர் தீயை அணைக்க கடும் முயற்சி மேற்கொண்டு கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

குறித்த தீ விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில் –

மேற்படி பகுதியில் தீப்பிழம்புடன் சத்தம் கேட்டதை அவதானித்த அயலவர்கள் வெளியில் சென்று பார்வையிட்ட சமயத்தில் மதுபானசாலையில் தீப்பற்றி எரிந்ததை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து உடனடியாக செயற்பட்ட அயலவர்கள் நகரசபை தீயணைப்பு பிரிவினருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு பிரிவினர் ஒரு மணி நேரமாக தீயியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்த போதும் கட்டடத்தின் மேல்ப்பகுதி முற்றாக எரிந்து நாசமாகியுள் ளது. விருந்தினர் விடுதியின் உட்பகுதி மதுபானத்துடன் தொடர்ந்தும் எரிந்த வண்ணம் பலமணிநேரம் நீடித்தது.

மேலும் விரைந்து செயற்பட்ட இலங்கை மின்சார சபையினர் குறித்த பகுதிக்கான மின்சாரத்தைத் துண்டித்துள்ளதுடன், பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப் பட்டனர். மதுபானசாலை கட்டடத்தினுள் இருந்து வெடிச் சத்தங்கள் கேட்டவண்ணம் உள்ளமையால் தீயை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன், அப்பகுதியில் பதற்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.

# சட்டத்தை மக்கள் கையிலெடுக்கும் சூழ்நிலை நாட்டில் உருவாகலாம்!

## லக்ஸ்மன்கிரியெல்லஆரூடம்

இலங்கை அரசியல் வரலாற்றில் இவ்வாறான மோசமான வீழ்ச்சி எந்த சந்தர்ப்பத்திலும் ஏற்பட்டதில்லை. இந்தநிலை தொடர்ந்தால் மக்கள் சட்டத்தைக்கையில்எடுக்கும்சூழ்நிலைஉருவாகும் என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி பிரதம கொறடாவும் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கிரியெல்ல சபையில் தெரிவித்தார்.

நாட்டில் ஜனநாயகம், மனித உரிமைகள் மீறப்பட்டுள்ள நிலையில், சிறுபான்மை மக்களுக்கு எதிராக பல நெருக்கடிகள் கொடுக்கப்படுகின்ற நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றும் சூழலில் சர்வதேச முதலீட்டாளர்கள் எவ்வாறு நாட்டுக்கு வருவார்கள் எனவும் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில், ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரையைக் கேட்டுக்கொண்டிருந்தோம். ஆனால் அவரது உரையில் நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் எதுவும் முன்வைக்கவில்லை.

கடந்தகால சம்பவங்களில் படிப்பினையைப் பெற்றுக்கொண்டு நிகழ்காலத்தில் வாழுங்கள் என்றே புத்தபெருமான் கூறியுள்ளார்.

எனினும் நாடு இன்று எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி பதில் எதனையும் கூறவில்லை. விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு, எரிபொருள் பிரச்சினைக்கு, மின்சார பிரச்சினை, எரிவாயு பிரச்சினை, மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை ஆகிய பிரதான பிரச்சினைகளுக்கு அவரது உரையில் எந்தத் தீர்வும் முன்வைக்கவில்லை.

அவ்வாறான நிலையில் அவரது உரை தொடர்பில் ஆரோக்கியமாக விமர்சிக்க முடியாது. கடந்த காலங்களில் முன்னெடுத்த விடயங்களையும், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்போவதையும் பேசிக்கொண்டு நிகழ்கால பிரச்சினைகளைக் கைவிடுவது அர்த்தமற்ற ஒன்றாகும்.

ஆகவே, ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை தோல்வியென்றே கூறுவோம்.

19 ஆம் திருத்தத்தை கொண்டு வந்து சட்ட சுயாதீனத்தை உருவாக்கினோம், நிறைவேற்று அதிகாரத்தில் தலையீட்டை குறைத்தோம், அதனை இன்று மீண்டும் நிறைவேற்று அதிகரத்தின் கீழ் கொண்டுவந்துள்ளனர். நீதிமன்ற சுயாதீனம் நிலைநாட்டப்பட்டுள்ளது என அரசாங்கம் கூறுவதால் எதுவும் நடக்கப்போவதில்லை. மாறாக பார்த்துக் கொண்டுள்ளவர்களுக்கு அது விளங்கவேண்டும், அவர்களே அதனை கூற வேண்டும். வேறு நாடுகளின் தலைவர்கள், இந்த நாட்டின் எதிர்க்கட்சி இதனைக் கூற வேண்டும்.

அதேபோல், அரசமைப்பு உருவாக்க விடயத்தில் இதுவரை காலமாக புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தெரிவுக்குழுவிற்கே அதிகாரம் இருக்க வேண்டும். ஆனால் இன்று என்ன நடந்துகொண்டுள்ளது, ஜனாதிபதியின் தனிப்பட்ட வழக்காடியவர்களை கொண்டு அரசமைப்பு ஒன்றை உருவாக்க கூறுகின்றனர்.

நாடாளுமன்றத்துக்கு தெரியாமல் அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. 20 ஆம் திருத்தத்திலும் இதுவே நடந்தது. ஆனால் எல்லோராலும் எதனையும் பேசலாம், ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகளை தெரிவுக் குழுவிற்கு முன்வைத்து அரசமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேலைசெய்ய தெரிந்தவருக்கு ஒரு நாள் போதும், வேலைசெய்ய தெரியாதவர்களுக்கு எத்தனை காலம் கொடுத்தும் அர்த்தமில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளில் அதுதான் நடந்துள்ளது. எமது ஆட்சியில் ஆரம்பித்த வேலைத் திட்டங்களை இவர்கள் திறந்து வைத்துக் கொண்டுள்ளனர். 1948 ஆம் ஆண்டில் இருந்து பல்வேறு அரசாங்கங்கள் ஆட்சி செய்தன, ஆனால் எந்த அரசாங்கத்திலும் நாடு வீழ்ச்சி காணவில்லை.

ஆனால் இன்று நிலைமை அவ்வாறு அல்ல. நாடு வீழ்ச்சி கண்டால் சகலதும் நாசமாகும். மக்கள் சட்டத்தை கையில் எடுக்கும் நிலைமை ஏற்படும். அது தொடர்பாக அவதானமாக இருக்க வேண்டும். இராச்சியம் வீழ்ச்சி கண்டால் சட்டம் ஒழுங்கு முழுமையாக வீழ்ச்சி காணும் என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். – என்றார்.



# டொலர் பந்நாக்குறையை நிவர்த்தி செய்வதந்கு உள்ளூர் உந்பத்திகளை மேம்படுத்த வேண்டும்

## கிழக்கு ஆளுநர் அநுராதா ஆலோசனை

நாட்டில் தற்போது நிலவும் டொலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்த வேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா ஜஹம்பத் தெரிவித்துள்ளார்.

டொலர் தட்டுப்பாடு காரணமாக நாட்டில் இறக்குமதி செய்யப்படும் அனைத்து அத்தியாவசியமற்ற பொருள்களும் நிறுத்தப்படுகின்றன எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கந்தளாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் உரையாற்றிய கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா ஜஹம்பத் தெரிவித்தவை வருமாறு – நாங்கள் இன்று டொலர் நெருக்கடியைப் பற்றிப் பேசுகிறோம். 1977 இல் இருந்து தினமும் கடன் வாங்கி வருகிறோம். ஒரு நாடாக நாங்கள் அதைத் தொடர்ந்து செய்தோம். இப்போது இந்த டொலர் நெருக்கடியால் அத்தியாவசியப் பொருள்களை மட்டுமே இறக்குமதி செய்கிறோம்.

தேவையற்ற பொருள்களை நாங்கள் இறக்குமதி செய்யமாட்டோம், எனவே, எங்கள் உள்ளூர் தயாரிப்புகளை மேம்படுத்த வேண்டும். நான் அதை ஒரு வரமாகப் பார்க்கிறேன். கொவிட் தொற்று நோய் தற்போதைய அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சிகளைப் பாதித்துள்ளது.

இது உலகின் அனைத்து நாடுகளையும் பாதித்தது. ஆனால், நம் நாட்டில் மட்டும் பல போராட்டங்கள் நடந்தன. இந்தத் தொற்றுநோய்க்கு அரசாங்கம் காரணமல்ல. மாறாக அரசாங்கத்தையே விமர்சிக்கிறார்கள். மேலும், கொவிட் தொற்று நோயால் நாடு சிதைந்தபோது, கூட்டுறவுத் துறை மதிப்புமிக்க சேவையைச் செய்தது. கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களும் மக்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்க மொபைல் வாகனங்களைப் பயன்படுத்தியது.

மேலும் நமது மக்களின் புதிய உள்ளூர் உற்பத்திகளுக்கு முன்னுரிமை அளித்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் திரு கோணமலை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, விவசாய அமைச்சின் செயலா ளர் கலாமதி பத்மராஜா, மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 258

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

### 661.திருகோணமலையிலும் கண்டியிலும் நடந்தவை என்ன?

நிதியம் சமர்ப்பித்திருந்த சாட்சியங்களின் - ஆவணங்களின் - பட்டியல் பிரகாரம் கிட்டத்தட்ட இருபதுக்கும் மேற்பட்ட நாள்கள் விசாரணைக்குத் தேவைப்பட



லாம் என்ற கணக்கு இருந்தது. அதுவரைக்கும் எந்த சிங்கள, பௌத்த அமைப்பும் சமர்ப்பணம் ஏதும் கொடுத்து, சாட்சியங்கள் முன்வைக்க ஒழுங்குகள் செய்யவில்லை. நிகழ்வுகள் முடிவதற்கு முதல்நாள் 27 ஒக்டோபர் 1978 ஆணையாளர் மன்றத்திற்கு வருமுன் மன்றம் முழுவதும் பௌத்த குருமாரினால் நிறைந்திருந்தது. ஆணையாளர் வந்ததும் எந்தச் சட்டத்தரணியும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தாமல் ஆணையத்தின் முதலியார் மூலம் விடயம் சொல்லப்பட்டது. அன்று சேருவாவிலவின் மடாலயத்தின் பௌத்த துறவி ஆணையகத்துக்கு சமர்ப்பணம் ஒன்று தர விரும்புகிறார் எனவும், அதனைத் தனது சிஷ்யன் மூலம் படிப்பதற்கு அனுமதி கோருகிறார் எனவும் அறிவிக்கப்பட்டது.

அரசின் சட்டத்தரணியோ தான் அவரை அழைக்கவில்லை எனவும், அவர் தன்னிச்சையாகவே வந்துள்ளார் எனவும் தெரிவிக்க, மரியாதைகள் நிமித்தம் அந்த சமர்ப்பணத்தை வாசிக்க அனுமதி கொடுப்பதற்கு ஆணையாளர் இணங்கினார்.

அந்த சமர்ப்பணத்தின் சாராம்சம் இதுதான்:-

திருகோணமலையில் வாழும் சிங்கள மக்கள் ஜூன் 1977 இலிருந்து இன்றுவரை இனப்பாகுபாடுகளுக்கும் வன்முறைக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். நீங்கள் இங்கு 21 நாள்கள் தங்கியிருந்து சாட்சியங்கள் எடுக்கவிருப்பதாக அறிகிறேன். அதில் 15 நாள்கள் தமிழ் மக்களுக்கு ஒதுக்கப்பட்டதாகவும் ஆக 4 நாள்கள்தான் சிங்கள மக்களுக்குத் தரப்படுவதாகவும், இவ்வளவில் 50 இற்கு மேற்பட்ட தமிழர் சாட்சியமளித்தாலும் 8 சிங்கள மக்களே அழைக்கப்பட்டுள்ளனர் என அறிகிறோம். இது பாரபட்சமானது. ஆகவே ஆணையாளர் திருகோணமலையில் பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் சாட்சியம் தருவதற்கு நாள்கள் ஒதுக்க வேண்டும். அவர்கள் கொழும்பு வந்து சாட்சியம் தர கஷ்டங்கள் இருப்பதால் அந்த ஏற்பாடுகள் திருகோணமலையிலேயே செய்யப்பட வேண்டும். -என்பது தான்.

ஆணையாளர் அந்த கூற்றுக்கள் சரியானதெனத் தான் கருதவில்லை என்றார். எனினும் காரியதரிசிகள் ஊடாக இவை பற்றி ஆராய்ந்து அறிவிக்கிறேன் என்ற போதும் அங்கிருந்த இரண்டொரு சிங்கள சட்டத்தரணிகள் பார்வையாளர்களைச் சுட்டிக்காட்டி 'இவர்களெல்லாம் கூட அப்படித்தான் நினைக்கிறார்கள். இந்த ஆணையாளர் தமிழர்களின் குறைபாட்டை மட்டுமே கேட்க வந்துள்ளார். ஆகவே மேலும் அவகாசங்கள் கொடுக்கப்பட வேண்டும்' என்று கூற, கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

அவற்றிற்குப் பதிலளித்த ஆணையாளர் தான் சிங்கள மக்களுக்குப் பாகுபாடு காட்டி நடத்தினேன் என்பதில் உண்மையில்லை, ஆனால், நீங்கள் அப்படி நினைத்தால் அது நான் வேண்டுமென்றே செய்ததல்ல. ஆணையகத்திற்கு திருகோணமலையில் வாழும் சிங்கள மக்களிடமிருந்து அதிக சமர்ப்பணங்கள் வரவில்லை. வந்தவற்றின் பதிவுகள் உள்ளன' எனக் குறிப்பிட்டார். திட்டங்களின் வெளிப்பாடான ஒரு மேற்படியை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அது குறித்து,, நிதியத்தின் சட்டத்தரணி சிவா ராஜரட்ணம் (இன்றைய சட்டமா அதிபர் சன்ஜேய் ராஜரட்ணத்தின் தந்தையார்) விளக்கமளித்தார்.




இலங்கை ஓரேநாடு என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது

1250 பேருக்கு சேவை நீடிப்பு

தான்விவரங்களைப் பார்த்தளவில் திருகோணமலையிலிருந்து ஆணையகத்திற்கு 565 சமர்ப்பணங்கள் வந்திருக்கின்றன எனவும், அவற்றில் 529 நிதியத்தால் பதியப்பட்டவை, மிகுதியில் கூட அதிகமானவை தமிழ் மக்களால் தாங்களாகவே செய்யப்பட்டவை. அவர்களில் தான் 129 பேரை சாட்சியம் தருவதற்காக அழைத்திருந்ததாகவும், அவர்களில் 60 பேரே சாட்சியம் அளித்திருக்கிறார்கள் எனவும், ஆனால் சிங்கள த்தரப்புக்கள் எதுவித சமர்ப்பணங்களும் இன்றி 64 சாட்சியங்களை நெறிப்படுத்தக் கோரி அவர்களில் 15 பேர் சாட்சியம் அளித்தனர் என்றும் சொன்னார். அவற்றை நெறிப் படுத்திய விதத்திலும், தமிழ் சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட எடுத்த நேர முறையிலும், நடைபெற்ற 20 நாள் விசாரணைகளில் 10 நாள்கள் சிங்கள தரப்புக்களாலும், 2 நாள் அரசாங்க சட்டத்தரணியாலும், 8 நாள்கள் நிதியத்தாலும் பயன்படுத்தப்பட்டன எனத் தெரிவித்து, சேருவில மடாதிபதியை சிங்களத் தரப்புக்கள் பௌத்த ஆளுமைக்கு ஆதரவாகப் பாவித்திருக்கிறார்கள் எனவும் விளக்கினார்.

ஆனால் அடுத்த நாள் தமிழ் ஊடகங்கள் சிவா ராஜரட்ணத்தின் பதிலுக்கு முக்கியம் கொடுத்து பிரசுரிக்க சிங்கள, ஆங்கில ஏடுகள், மடாதிபதியின் சமர்ப்பணத்தைப் பதிப்பித்து மற்றவற்றைப் புதைத்துவிட்டன.

இந்த முனைப்போடு ஆணைக்குழு கண்டிக்குச் சென்றது.



VII වැනි සැසි වාර්තාව – 1980

SESSIONAL PAPER No. VII—1980

(ඉංග්‍රීසි මුද්‍රණය/English Print)

1977 අගෝස්තු 13 සිට සැප්තැම්බර් 15 දින දක්වා සිදු වූ සිද්ධීන් පිළිබඳ ජනාධිපති පරීක්ෂණ කොමිෂන් සභා වාර්තාව

REPORT OF THE PRESIDENTIAL COMMISSION OF INQUIRY INTO THE INCIDENTS WHICH TOOK PLACE BETWEEN 13th AUGUST AND 15th SEPTEMBER, 1977

Printed on the Orders of the Government

1980 ජූලි/1980 July

PRINTED AT THE DEPARTMENT OF GOVERNMENT PRINTING, SRI LANKA

TO BE PURCHASED AT THE GOVERNMENT PUBLICATIONS BUREAU, P. O. BOX 500, SECRETARIAT, COLOMBO

Price } Rs. 16.50

Postage } Rs. 2.25

### 662.கண்டியில் நடந்ததென்ன?

இங்கு முதல் தடவையாக சிங்கள தரப்பின் அரசியல் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கண்டிக் கிளை சமர்ப்பணமும் தந்து சாட்சிகளை நெறிப் படுத்தியது. கண்டியில் சட்டத்தரணி சங் கக்கார ஆஜராகி அவ்கள் வைத்த சாட்சியங்களின் வாதம் பின்வருமாறு அமைந்தது: -

கண்டிப் பகுதியில் பல வன்முறைகள் தங்களது கட்சி அங்கத்தினர்களால் செய்யப்பட்டனவாகவே பலவாறாக செய்திகள் அரசாங்கத் தரப்பால் வெளிப்படுத்தப்படுகின்றன. அதில் உண்மையில்லை. 1970-1977 இல் புதிய அரசு பதவியேற்கும் வரை அவர்களது கட்சிதான் பதவியிலிருந்தது. அவர்களிடம் பொலிஸ், பாதுகாப்புப் படையினர் அறிந்து கொண்ட புலன் விசாரணை விவரங்களெல்லாம் இருந்தன. ஆயின் அவற்றின் அடிப்படையில், அவர்கள் தமிழ் இளைஞர்களோ அல்லது அவர்களது அரசியல்வாதிகளோ இந்தக் கலவரங்களுக்குக் காரணம் என என்றுமே அறிக்கைகள் இடப்படவில்லை. இந்த அரசாங்கமே தான் பதவி பெற்ற சில மாதங்களில் இதனை தூவிவிட்டு சிலர் செய்த தனிப்பட்ட குரோதங்களை இனவாதமாகத் தூபமிட்டுக் கொண்டு சீரழிக்கிறார்கள். விடயங்களை திசை திருப்ப முயலுகின்றனர் - என்ற நிலைப்பாட்டை எடுத்தனர்.

நிதியத்தின் சட்டத்தரணிகளோ தாங்கள் எந்த ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சியையும் கலவரங்களுக்கு காரணகர்த்தாக்கள் என சமர்ப்பணம் தரவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதே நிலைப்பாட்டில்தான் சாட்சியங்கள் அளித்திருந்தார்கள் எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

அதுவரை வெளிவந்த பாதிக்கப்பட்ட மக்களின் சாட்சியங்களால் எல்லா சிங்கள தரப்பு அரசியல் கட்சிகளும் அவமானத்தால் சர்வதேச ரீதியில் தலைகுனிந்திருந்தன. நடந்தவை மனித குலத்திற்கெதிரானவை. ஆகவே ஒவ்வொரு கட்சியும் தங்களை விலத்தி மற்றவரை இடித்து விடப் பார்க்க, சிங்களப் பெரும்பான்மை எல்லாவற்றையுமே தமிழ் மக்கள் மீது திணிக்கத் திட்டங்கள் போட்டது.

அதற்குச் சாதகமாக, தமிழ் மக்களது அரசியலும் வெளிப்படையாக வன்முறைகளைக் கண்டிப்பதும், இரகசியமாக விடுதலை இயக்கங்களுடன் உறவாடுவதாகவும் இருந்தது.

அவை தமிழ் உளவாளிகள் மூலமே புலனாய்வுப் பிரிவுகளுக்கு வந்து, பயங்கரவாதத்துக்கு எதிரான பலமான நடவடிக்கைகள் வெளிப்படையாகவே பேசப்பட்டன. சட்டமும் ஒழுங்கும் பேசு பொருளாகின.

(வளரும்)